மலர்-5 இதழ்-121 செப்டம்பர் 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை

ஆன்மிகமலர் mobile app
GET IT ON Google Play

www.aanmeegamalar.com

e-magazine



விநாயகர் சதுர்த்தி ஸ்பெஷல்

# விநாயகருக்கு கொழுக்கட்டை படைப்பது ஏன்?

www.aanmeegamalar.com

# கேது தோஷம் போக்கும் அருகம்புல்

ஒருவர் ஜாதகத்தில் லக்னத்தில் கேதுஇருந்து விட்டாலோ அல்லது சந்திரன் கேது வுடன் சேர்ந்து நின்றுவிட்டாலும் அல்லது கேதுவின் அஷ்வினி, மகம் மற்றும் மூலம் நக்ஷத்திர பாதங்களில் பிறந்துவிட்டாலும் அவர்களுக்கு ஞாபக மறதியோடு குழப்பமும் ஒருவித பய உணர்வும் எப்போதும் இருக்கும்.

இது ஜோதிட ரீதியிலாக மெய்ப்பிக்கப்பட்ட உண்மையாகும். இவ்வாறு ஜாதகம் அமையப் பெற்றவர்கள் மிகுந்த மன உளைச்சலும் பய உணர்வுடன் வாழ்வார்கள். இது கேதுவின் தீய செயலாகும். புல் வகை தாவரங்களுக்கு அதிபதி கேது பகவான் என ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

எனவே விநாயகருக்கு அருகம்புல் அர்ச்சனை, அருகம்புல் சார்த்துவது போன்றவற்றில் தொடர்ந்து ஈடுபடும்போது கேதுபகவானின் தீய செயல்கள் குறையும், குறிப்பாக கேதுவின் அஷ்வினி, மகம் மற்றும் மூலம் ஆகிய நாட்களில் அருகம்புல் கொண்டு விநாயகரை வணங்கிவந்தால் இறுக்கமான மனநிலை, பயம் போன்ற உணர்வும் நீங்கும்.

# தூர்வாயுக்ம சமர்ப்பணம்

குடும்பத்தில் தொடர் பிரச்னைகள், தொல்லைகள், கடன், வறுமை, ஆகியவற்றால்துன்புறுபவர்கள் விநாயகப்பெருமானுக்கு அறுகம்புல் சாத்தி வழிபடுபது மற்றும் 21 மலர்கள், 21 இலைகள் கொண்டு அர்ச்சித்து வழிபடுவதால் மேற்கண்ட பிரச்சனைகள் விரைவாக தீரும் என்பார்கள்.

அதைவிட 21 முறை தூர்வாயுக்ம சமர்ப்பணமும் செய்து வழிபட்டால் அதிகப்படியான பலன் பெறலாம் என்று வேதங்கள் கூறுகிறது.

அது சரி தூர்வாயுக்ம சமர்ப்பணம் என்றால் என்ன? என்பதைப் பார்ப்போம்.

தூர்வா என்றால் அறுகம்புல். யுக்மம் என்றால் இரட்டை என்று பொருள். பொதுவாக அர்ச்சனையின்போது நாம் அருகம்புல்லை சாத்துவது வழக்கம். விநாயகர் சதுர்த்தி அன்று அறுகம்புல் கொண்டு அர்ச்சிப்பதன் மூலம் அற்புத பலன்களைப் பெறலாம். அதுவும் இரண்டு இரண்டாக அறுகம்புற்களை எடுத்து விநாயகரின் நாமத்தைச் சொல்லி சாத்த வேண்டும். இவ்வாறு செய்வதை தூர்வாயுக்ம சமர்ப்பணம் என்று கூறப்படுகிறது. மேற்கண்ட பிரச்சனை எளிமையாக தீர இந்த வழி முறையை பின்பற்றுங்கள்.




# கஜமுக அனுக்ரஹ வடிவம்

விநாயகருக்குநான்கு கரங்களுடன், தும்பிக்கையும் சேர்த்து ஐந்து கரங்கள் உண்டு. எனவே தான் அவர் 'ஐங்கரன்' என்று பெயர் பெற்றார். இந்த ஐந்து கரங்களும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் செய்கின்றன.

சிவபெருமானுக்கும் அம்பாளுக்கும் இடையில் முருகப்பெருமான் அமர்ந்திருக்கும் வடிவத்தை, 'சோமாஸ்கந்தர்' வடிவம் என்று சொல்வார்கள். அதே போல சிவபெருமானுக்கும் அம்பாளுக்கும் இடையில் விநாயகர் அமர்ந்திருந்தால் அந்த வடிவத்தை, 'கஜமுக அனுக்ரஹ வடிவம்' என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. இந்த உருவப்படத்தை வீட்டில் வைத்திருந்தால் குடும்பத்தில் அமைதியும், குழந்தைகள் புத்திசாலித்தனத் துடனும் விளங்குவார்கள்.

மேலும் விநாயகருக்கு கரும்பு, பழங்கள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், அவல், துவரை, அவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், பச்சரிசி, பிட்டு, வெள்ளரிப்பழம், கிழங்கு, அன்னம், கடலை, மோதகம் ஆகியவற்றை நைவேத்தியமாக படைத்து வழிபட வேண்டும். இவற்றுடன் அருகம்புல்லை வைத்து அர்ச்சித்து வந்தால் பிறவிப் பிணி நீங்கும், வீட்டில் ஐஸ்வர்யம் நிலைத்து நிற்கும்.

# அருகம்புல்லின் சிறப்புகள்

விநாயகருக்கு உகந்தது அருகம்புல், இந்த அருகம்புல்லுக்கு பல்வேறு சிறப்புகள் உள்ளது, குபேரன் தன்னுடைய செல்வங்களுக்கு மேலானது அருகம்புல் என்று கூறியுள்ளார்.

தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தைஎடுக்க பாற்கடலை கடைந்தனர், அப்போது பாற்கடலிலிருந்து வெளிவந்த அமிர்தத்தின் ஒரு துளி சிதறியது, அந்த சிதறிய அமிர்தம் அருகம்புல்லின் மீது விழுந்தது.

அமிர்தத்தை உண்ட தேவர்கள் இறவா வரம் பெற்றது போன்று, அமிர்த துளி பட்ட அருகம் புல்லும் அழியா வரம் பெற்றது. அருகம்புல்லிற்கு அழிவென்பதே கிடையாது.

மேலும் பூஜைக்கு உரிய இந்த புல்லிற்கு ஆகர்ஷன சக்தியை உறிஞ்சும் தன்மை உள்ளதால், அனைத்து பூஜைகளிலும் விநாயரைப் போன்று முதல் இடம் பிடிப்பது அருகம்புல். இந்த அருகம் புல் நல்ல சக்தியை தேக்கி வைத்து, தீய சக்தியை விலக்கி வைக்கும் தன்மையை பெற்றுள்ளது. இதுபோன்ற அரிய தன்மையை வேறு எந்த தாவர வகைகளும் பெறவில்லை.



புனிதவேல்

யாஷினி தேவி என்ற தேவ மங்கை விநாயகரை திருமணம் செய்ய நினைத்து தவம் இருந்தாள். திருமணத்தின் மீது நாட்டம் இல்லாத விநாயகர், அந்த யாஷினியை சமாதானம் செய்து, அவளின் தவத்திற்கு பலன் கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால், அந்த யாஷினையை அருகம்புல்லாக மாறி எனது விருப்ப பொருளாக திகழ்வாய் என்று வரம் கொடுத்ததாக ஒரு புராண கதை உள்ளது.

ஒரு சமயம் கைலாயத்தில் பார்வதியும் சிவனும் தாயம் விளையாடிய போது, நடுவராக இருந்த நந்தி சிவனுக்கு ஆதரவாக கூறியதால் கோபம் கொண்ட பார்வதி தேவி, நந்திக்கு சாபம் கொடுத்தார். இதனால் கலங்கிய நந்தியம் பெருமான் பார்வதிதேவியிடம் சாபவிமோசனம் கேட்டார்.

கணேச சதுர்த்தியின் போது விநாயகருக்கு விருப்பமான பொருளை சமர்பித்தால் சாப விமோசனம் கிடைக்கும் என்று கூறியதால், விநாயகருக்கு நந்தியம்பெருமாள் அருகம்புல்லை படைத்து சாப விமோசனம் பெற்றாராம்.

இவ்வளவு சக்தி வாய்ந்த அருகம்புல்லை விநாயகருக்கு படைப்பதால், விநாயகரின் அருளுக்கு பாத்திரமாவதுடன், நந்தியம் பெருமானின் சாபம் விலகியது போல, சிறு சிறு பாவங்கள் விலகும்.

இனி விநாயகரை தரிசிக்கப்போகும்போது அவசியம் அவருக்கு விருப்பமான அருகம்புல்லை எடுத்துச் செல்வோம்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572



# 32 வகையான விநாயகர்

## 16 ஷோடச கணபதி
## 16 ஏக விம்சதி கணபதி

விநாயகருக்கு பல்வேறு வடிவங்கள், பல்வேறு பெயர்கள் இருந்தாலும் 32 வகை பிள்ளையார் மிக முக்கியமானவர்களாக பார்க்கப்படுகிறது.

அதிலும் குறிப்பாக, 32 கணபதிகளில் முதல் 16 கணபதி ‘ஷோடச கணபதி’ வகைகள் என்றும், அடுத்த 16 கணபதி ‘ஏக விம்சதி’ வகை என பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கணபதி குறித்து அதன் உருவக் குறித்து இங்கு பார்போம்.



www.aanmeegamalar.com

### 1. பால கணபதி

குழந்தை போன்ற உருவத்தில், செங்கதிர் நிறத்தில் காட்சி தரக்கூடியவர். இவர் மாம்பழம், வாழைப்பழம், பலாப்பலம், கரும்பு ஆகியவற்ற தன் நான்கு திருக்கரங்களில் தாங்கியவர்.

### 2. தருண கணபதி

சிவந்த திருமேனியை கொண்ட தருண கணபதி, அங்குசம், பாசம், ஒடிந்த தந்தம், கரும்புத் துண்டு, நெற்கதிர்கள், மோதகம், விளாம்பழம், நாவற்பழம் ஆகியவற்றை தன் 8 கரங்களில் ஏந்தியவர்.

### 3. பக்தி கணபதி

வெள்ளை நிறத்தில் காணப்படும் பக்தி கணபதி, தனது நான்கு திருக்கரங்களில் பாயாசக் கிண்ணம், தேங்காய், மாம்பழம், வாழைப்பழம் ஆகிய வற்றை வைத்திருப்பார்.

### 4. வீர கணபதி:

சிவந்த திருமேனியுடன் காணப்படும் வீர கணபதி, தன்னுடைய 16 திருக்கரங்களில் வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறு பொருட்களை திருக் கரங்களிலும் ஏந்தியிருப்பார்.

### 5. சக்தி கணபதி:

அந்தி வானம் போல சிவந்த மேனியுடன் இருக்கும் சக்தி கணபதி, தன் மடியில் பச்சை நிறத்திலான தேவி யை, ஒரு கையால் இருப்பில் தேவியை அனைத்திருப் பது போலவும், மற்ற கைகளில் அபய ஹஸ்தம், பாசம், பூமாலை ஆகிய வற்றை தாங்கியவர்.

### 6. துவிஜ கணபதி

வெண்மையான திருமேனியைஉடைய துவிஜ கணபதி, நான்கு முகங்கள், புத்தகம், அட்சமாலை, கமண் டலம், தண்டம்

ஆகியவற்றை தன் கரங்களில் தாங்கியவர்.

### 7. சித்தி கணபதி

பொன் மற்றும் பசுமை நிறம் கலந்த சித்தி விநாயகர், தன் 4 கரங்களில் பரசு, பூங்கொத்து, எள்ளுருண்டை, மாம்பழம் ஆகியவற் றையும், தன் துதிக்கையில் மோதகத்தை தாங்கி இருப்பார்.

### 8. உச்சிஷ்ட கணபதி

நீலநிறத்தில் காட்சி அளிக்கும் உச்சிஷ்ட கணபதி, தன் 6 திருக்கரங்களில் இரண்டில் நீலோத்பவ மலர்களும், மாதுளம் பழம், நெற்கதி, அட்சமாலை, வீணை ஆகியவற்றை தாங்கி இருப்பார். அதோடு தான் காம மோகிதராக, பெண்ணின் மேனியில் தன் துதிக்கையை வைத்து காணப்படுவார்.

### 9. விக்ன கணபதி

தங்க நிறத்தை உடைய விக்ன கணபதி, தனது 10 திருக்கரங்களில் சக்கரம், சங்கு, கோடாரி, ஒடிந்த தந்தம், பாணம், கரும்பு வில், பூங்கொத்து, புஷ்ப பாணம், பாசம், மாலை ஆகியவற்றுடன் காணப்படுகின்றார்.

### 10. ஷிப்ர கணபதி

செந்நிறத்தில் இருக்கும் ஷிப்ர கணபதி, தன் கைகளில் ஒடிந்த தந்தம், கற்பகக் கொடி, பாசம், அங்குசம் ஆகியவற்றை தன் 4 திருக்கரங்களில் ஏந்தி ரத்ன கும்பத்தை துதிக்கையில் கொண்டிருப்பார்.

### 11. ஹேரம்ப கணபதி

ஐந்து முகங்களை கொண்ட ஹேரம்ப கணபதி, தனது 10 கரங்களில் இரண்டு அபய மற்றும் வரத முத்திரையோடும், இதர கரங்களில் பாசம், பரசு, சம்மட்டி, தந்தம், மாலை, அட்சமாலை மோதகம், பழம் ஆகியவற்றை ஏந்தியுள்ளார்.

### 12. லட்சுமி கணபதி

வெள்ளை நிறத்தில் இருக்கும் லட்சுமி கணபதி, நீல நிற தாமரைப் பூவை தனது கையில்ஏந்தி, இரு தேவிகளுடன் காணப்படுவார். தனது8 திருக்கரங்களில்கலசம், அங்குசம், பாசம், கற்பகக் கொடி, கட்சம், வரதம், கிளி, மாதுளம் பழம் ஆகிய வற்றை கொண்டிருப்பார்.

### 13. மகா கணபதி

செந்நிற திருமேனியுடன் காணப்படும் மகாகண பதி, 10 கைகளையும், மூன்று கண்களையும், தன் முடியில் பிறைச்சந்திரனும் உடையவர். தாமரை மலரை ஏந்திய தேவி, இடது தொடையில் தேவியை அமரவைத்து, தனது கையால் அனைத்து இருப்பார். மற்ற கரங்களில் கதை, கரும்பு, வில், சக்கர, பாச, தந்தம், ரத்ன கலசம், நெற்கதி, நீலோத்பலம், மாதுளை ஆகிய வற்றை ஏந்தி இருப்பார்.

### 14. விஜய கணபதி

பெருச்சாளி வாகனத்தில் அமர்ந்திருக்கும் விஜய கணபதி, பாசம், அங்குசம், ஒடிந்த தந்தம், மாம்பழம் ஆகியவற்றை தன் 4 கரங்களில் ஏந்தியிருப்பார்.

### 15. நிருத்த கணபதி

பொன் நிற மேனியுடைய நிருத்த கணபதி, ஆறு திருக்கரங்களையும், அதில் மோதிரங்கள் அணிந்த கரங்களில், அங்குசம்,ம் பாசம். அபூபம், கோடாரி, தந்தம் ஆகியவற்றைத் ஏந்தி, கற்பக விருட்சத்தின் கீழ் அமர்ந்திருப்பார். இந்த கணபதியை கூத்தாடும் பிள்ளையார் எனவும் அழைப்பதுண்டு.

### 16. ஊர்த்துவ கணபதி

தங்கம் போல் ஜொலிக்கும் ஊர்த்துவ கணபதி, தாமரை மலர்களை தன் கரங்களில் தாங்கி, பச்சை நிற மேனி தேவையை அணைத்தவாறு, தந்தம், பாணம், தாமரை, கரும்பு வில், நீல புஷ்பம் ஆகியவற்றை ஏந்தி இருப்பார்.

### 17. ஏகாட்சர கணபதி

செந்நிறமாக இருக்கும் ஏகாட்ச கணபதி, செந் நிற உடை, செம்மலர் மாலையை அணிந்து, பெருச்சாளி வாகனத்தின் மீது பத்மாசனத்தில் அமர்ந்திருப்பார். மூன்று கண்களும், முடியில் பிறைச்சந்திரனை சூடியும் இருப்பார்.

### 18. வர கணபதி

சிவந்த திருமேனியை உடைய வர கணபதி, தனது நான்கு கரங்களில் பாசம், அங்குசம், அமுதக்கிண்ணம் மற்றும் கொடியை தாங்கி இருப்பார். பிறை சூடிய இவருக்கு மூன்று நேத்திரங்கள் உண்டு.

### 19. திரயாக்ஷர கணபதி

பொன்னிற மேனியில் இருக்கும் திரயாக்ஷர கணபதி, பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஆகியவற்றை தனது நான்கு கரங்களிலும், மோதகத்தை தும்பிக்கையிலும் தாங்கி யிருக்கிறார்.

### 20. க்ஷிப்ரபிரசாத கணபதி

பெரிய வயிற்றினை கொண்ட க்ஷிப்ரபிரசாத கண பதி, ஆபரணங்களை சூடி, ஆறு திருக்கரங்களில், பாசம்,






அங்குசம், தாமரை, தர்ப்பை ஆகியவற்றை ஏந்தியதோடு, ஒரு கரத்தில் ஹஸ்த முத்திரையையும், துதிக்கையில் மாதுளம் பழத்தையும் கொண்டவர்.

### 21. ஹரித்ரா கணபதி

மஞ்சள் நிறத்தில் இருக்கும் ஹரித்ரா கணபதி, பாசம், அங்குசம், தந்தம்,மோதகம்ஆகிய வற்றை, 4 திருக்கரங் களில் ஏந்தி இருப்பார்.

### 22. ஏகதந்தி கணபதி

நீல நிற மேனியான ஏகாந்த கணபதி பெரிய வயிறு கொண்டிருப்பார். கோடரி, அட்சமாலை, தந்தம், லட்டு ஆகியவற்றை, நான்கு திருக்கரங்களில் ஏந்தி காணப்படுகிறார்.

### 23. சிருஷ்டி கணபதி

சிவந்த மேனியுடன் இருக்கும் சிருஷ்டி கண்பதி தன் 4 கரங்களில் பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தில் அமர்ந்து காட்சி கொடுக்கிறார்.

### 24. உத்தண்ட கணபதி

தனது பத்து திருக்கரங்களில்பாசம், நீல புஷ்பம், தாமரை, தந்தம், கரும்பு வில், கதை, ரத்ன கலசம், நெற்கதிர், மாதுளம் பழம், மாலை ஆகியவைகளை வைத்திருப்பார். இடது தொடையில், பச்சை நிற மேனி தேவியை ஏற்றிருப்பவர்.

### 25. ரணமோசன கணபதி

வெண்பளிங்கு மேனியுடன்இருக்கும் ரணமோசன கணபதி, செந்நிறப் பட்டாடை உடுத்தி இருப்பார். தன் கரங்களில், பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தாங்கி காணப்படுகிறார்.

### 26. துண்டி கணபதி

நான்கு திருக்கரங்களில், அட்ச மாலை, கோடரி, ரத்ன கலசம், ஒடிந்த தந்தம் இவைகளோடு அருள் பாலிக் கிறார். காசி ஷேத்திரத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவர்.



கீதா–ராஜன்

### 27. துவிமுக கணபதி

இரண்டு முகங்களை கொண்ட துவிமுக கணபதி, பசு மையான நீல நிற கொண்டவர். செம் பட்டாடை உடுத்தி, தந் தம், பாசம், அங்குசம், ரத்ன பாத்திரத்தை ஆகியவற்றை நான்கு திருக் கரங்களில் ஏந்தியவர்.

### 28. மும்முக கணபதி

மூன்று முகத்துடன் பொற்றாமரை ஆசனத்தில் காணப்படுபவர். சிவந்த மேனியைஉடைய இவர், பாசம், அங்குசம், அட்ச மாலை, அமுத கலசம், அபய, ஹஸ்த முத்தி ரைகளைத் தாங்கி காட்சி தருகிறார்.

### 29. சிங்க கணபதி

சிங்கவாகனத்தில் எழுந் தருளிஇருக்கும் சிங்க கணபதி வெண்மையான நிறத்தில் இருப்பதோடு தனது இரண்டு திருக்கரங்களில் வரதம், அபயம் முத்திரைகளையும், ஆறு திருக்கரங்களில், கற்பகக் கொடி, வீணை, சிங்கம், தாமரை, பூங்கொத்து, ரத்ன கலசத்தை தாங்கியவர்.

### 30. யோக கணபதி

செஞ்சூரியன் நிறத்தில், நீல நிற ஆடையை தரித்த இவர், பாசம், அட்சமாலை, யோகதண்டம், கரும்பு ஆகியவைகளைத் ஏந்தி, யோக நிலையில் தோற்றமளிக்கிறார்.

### 31. துர்க்கா கணபதி

பசும் பொன் நிறத்தில் இருக்கும் துர்கா கணபதி, தன் 8 திருக்கரங்களில் அங்குசம், பாசம், பாணம், அட்சமாலை, தந்தம், வில், கொடி, நாவற்பழம் ஆகியவற்றைத் தாங்கி பெரிய உருவத்துடன் காணப்படுபவர்.

### 32. சங்கட ஹர கணபதி

இளஞ்சூரியன் நிறத்த்தில், தன் இடது தொடையில் நீல நிற பூவை ஏந்திய தேவியை வைத்திருப்பார். நீல நிற ஆடை அணிந்து, செந்தாமரை பீடத்தில் அமர்ந்து வரத முத்திரையுடன், அங்குசம், பாசம், பாயசக் கிண்ணத்தினைத் தாங்கி அருள் பாலிப்பவர்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# விநாயகரும்–எலியும் சுவாரஸ்ய தகவல்

முத்கல பூர்ணா என்ற இந்து நூலில் விநாயகரின் எட்டு அவதாரங்களை கூறியிருப்பர். அதில், 5 அவதாரங்களில் விநாயகர், எலியையே வாகனமாக பயன்படுத்துவார்.

வக்ரதுண்டர் என்ற அவதாரத்தில் சிங்கத்தையும், விகட அவதாரத்தில் மயிலையும், விக்னராஜா அவதாரத்தில் புனிதமான பாம்பையும் வாகனமாக பயன்படுத்துவார். அதேபோல், கணேஷ பூர்ணா என்ற இந்து நூலில், விநாயகர் எலி, சிங்கம், மயில் மற்றும் குதிரை ஆகியவற்றை வாகனங்களாக பயன் படுத்துவதாகவும்,ஜெயின் மத நம்பிக்கைகளில் விநாயகர் எலி, யானை, ஆமை, ஆடு மற்றும் மயில் ஆகியவற்றை வாக னங்களாக பயன் படுத்தியதாகவும் கூறப் படுகிறது.



அழகுராஜா

மேலும் ஒரு புராணக் கதையில்.

தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மிகப் பெரிய தொல்லைகள் கொடுத்தவன் கஜமுகாசுரன். அவனை எப்படியாகிலும் ஒழித்து விடும்படி பிள்ளையாரை வேண்டினான் இந்திரன்.

கணபதியும் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க அவனைச் சம்ஹாரம் செய்யப் புறப்பட்டார். கடுமையான சண்டையில் விநாயகப் பெருமான், தனது ஒரு தந்தத்தை ஒடித்து கஜமுகாசுரன் மீது எறிந்தார். கீழே விழுந்து இறந்தவன் போல நடித்த அவன், திடீரெனப் பெருச்சாளி ரூபம் எடுத்து கணேசர் மீது பாய்ந்தான். பிள்ளையார் அவன் மீது தாவி ஏறி அமர்ந்தார். இனி எப்போதும் இதுபோலவே என்னைச் சுமக்கக்கடவாயாக என்றும் ‘ஆசிர்வதித்தார்’.

இதைத் தவிர, பழங்காலங்களில் விவசாயமே அதிக முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக இருந்தது. அப்போது, எலிகள் விவசாய நிலத்தை நாசம் செய்ததால், அவற்றை வீழ்த்த விநாயகர் அவற்றை வாகனங்களாக பயன்படுத்தியதாகவும் கதைகள் உள்ளன. மற்றொரு நம்பிக்கை என்னவென்றால், எலிகள் மிகவும் சிறியதாக இருப்பதாலும், அவற்றால் எந்த சிறு துளையிலும், இருள் சூழ்ந்த இடங்களிலும் நுழைய முடியும் என்பதாலும், விநாயகர் இருளை நீக்கவும், மூலை முடுக்கில் உள்ள தீய சக்திகளை அழிக்கவும் எளிதாக இருக்கும் என் பதற்காக எலியை பயன் படுத்துவதாக கூறப் படுகிறது.




– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# தோப்புக்கரணம் போடுவதற்கான காரணம்

யோக சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதில் நாம் நாடிகளில் ஏற்படும் சலனங்களால், எப்படி மனதையும் நல்லதாக மாற்றிக்கொள்ளலாம் என்று வழி சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய உடம்பைப் பல தினுசுகளாக வளைத்துச் செய்யும் அப்பியாசங்களால், சுவாசத்தின் போக்கில் உண்டாக்கிக் கொள்ளும் மாறுதல்களால், நம்முடைய உள்ளம் உயர்வதற்கான வழி அந்த யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.



தலையில் குட்டிக்கொள்வது, தோப்புக்கரணம் போடுவது போன்றவற்றால் நம்முடைய நாடிகளின் சலனம் மாறும். மனதில் தெய்வீகமான மாறுதல்கள் உண்டாகும். இது ஒருவகையில் நமது நாடியில் சலனத்தை உண்டாக்குவதால், இதுவும் ஒரு யோகவை போன்ற பயிற்சிதான்.

இனி விநாயகரின் சன்னதியில் தலையில் குட்டிக்கொண்டு தோப்புகரணம் போட்டு மனதை புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்வோம்.

# நான்கு யுகங்களில் நான்கு அவதாரம் மேற்கொண்ட விநாயகர்




கிருத, திரேதா, துவாபர, கலி ஆகிய நான்கு யுகங் களிலும் நான்கு அவதாரங்களாக அவதரிப்பதாகக் கூறு கின்றது.

**கிருத யுகம்:** காஸ்யப முனிவருக்கும் அதீதீதேவிக்கும் பிள்ளையாக அவதரித்து அசுரர்களை அழித்து தர்மத்தை நிலை நாட்டினார். கிருத யுக அவதாரத்தில் பிள்ளையாரின் திருநாமம் மகாகடர்.

**திரேதா யுகம்:** அம்பிகை பார்வதியின் பிள்ளையாக அவதரித்து, அழகான மிகப்பெரிய மயிலை தம் குழந்தைப் பருவத்தில் பிடித்து விளையாடியதால் மயூரேசர் என்ற திருநாமம்

**துவாபர யுகம்:** கஜானனன் என்ற திருநாமத்துடன் அவதரித்து, பராசர மகரிஷி மற்றும் பராசர மகரிஷியின் தேவி வத்ஸலாவால் சிறப்பாக வளர்க்கப்பட்டார்.

**கலி யுகம்:** சிவபெருமானுக்கும் அம்பிகை பார்வதி தேவிக்கும் குழந்தையாக அவதரித்து அதர்மம் செய்வோரின் செயல்களில் தடங்கல்களையும் தர்ம நெறியில் இருப் போரின் இன்னல்களைப் போக்கியும் வருவதாகக் கணேச புராணம் குறிப்பிடுகின்றது.

# விநாயக உருவமும் உருவத்தின் தாத்பரியமும்




**திருவடி:** ஆன்மாவைப் பொருந்தி நின்று மலகன்ம மாயைகளை தொழிற்படுத்தி இருமை இன்பத்தை அளிப்பது ஞானம். அந்த ஞானமே விநாயகரின் திருவடிகளாக இருக்கின்றன.

**பெருவயிறு:** ஆகாசம் எல்லாப் பொருள்களும் தன்னகத்து ஒடுங்கவும், உண்டாகவும் இடந்தந்து இருப்பது போலப் பெருவயிறாகிய ஆகாசமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள்அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகின்றது.

**ஐந்துகரங்கள்:** பிள்ளையாரின் ஒரு கை பாசத்தை ஏந்தியுள்ளது. அது படைத்தலைக் குறிக்கிறது. எனவே இவரே பிரம்மாவாகிறார்.

**தந்தம் ஏந்திய கை:** காத்தலை குறிக்கிறது. எனவே இவரே மகாவிஷ்ணுவாகிறார்

**துதிக்கை:** அனுக்ரகம் செய்கிறது. அங்குசம் ஏந்திய கை அழித்தலை குறிக்கிறது. எனவே, இவர் ருத்ரர் ஆகிறார்.

**மோதகம் ஏந்திய கை:** அருளைக் குறிக்கிறது. எனவே, இவரே சர்வ சக்தி படைத்த பரமேஸ்வரனாகவும் இருக்கிறார்

**கொம்புகள்:** மகாபாரதத்தை எழுதுவதற்காக தமது கொம்பையே ஒடித்தது வெளித்தோற்றத்தை விட அறிவுக்கு முன்னுரிமை தர வேண்டியதை உணர்த்துவதாகக் கூறப்படுகின்றது.

**தாழ்செவி:** விநாயகரின் முறம் போன்ற பெரிய காதுகள் செவியில் விழும் செய்திகளை சலித்து நல்லவற்றை மட்டும் தேர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கின்றன.









## கடகராசியினரின் நாக தோஷத்தை தீர்க்கும்

# திருவாலீஸ்வரர் ஸ்ரீதிரிபுரசுந்தரி

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம் நெரும்பூரில் திருவாலீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. திருக்கழுக்குன்றத்திலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் நெரும்பூர் கிராமத்தில் இந்த கோயில் அமைந்துள்ளது.

வரலாற்றுத்தகவல்கள்:

முதலாம் இராஜராஜன் காலத்தில் கி.பி.994 ஆம் ஆண்டு எடுப்பிக்கப்பட்டு விளக்கெரிக்கவும். வழிபாடு தொடரவும் தானங்கள் வழங்கப் பட்டுள்ளன. அதற்காக இங்கு 8 கல்வெட்டுக்கள் உள்ளது. கல்வெட்டுக்களில் ஊர் பெயர் நெருமூர் என்றும் நெரூமூரான மதுராந்தக நல்லூர் என்றும் உள்ளன.

நாட்டுப்பிரிவாகவும் நெரூம்பூர் இருந்துள்ளது. இறைவன் பெயர் திருவாலீஸ்வரர் என்பது திருவானீஸ்வரமுடையார் என வழங்கப்பட்டுள் ளது. திருவாய்நீலமுடையார் என மற்றோமொரு சாசனம் கூறுகின்றது.

முதலாம் குலோத்துங்கள் ஆட்சியில் கற்றளி யாக இது எழுப்பப்பட்டுள்ளது. இறைவ னுக்கு வேட்டக்குடியான புலியத்தேவன் என்பவன் நெரும்பூரில் நிலம் அளித்துள்ளான். கைக்கோளர் செலுத்தவேண்டிய கடமை. வாசல் வரியை முதலாம் இரானாராயணன் நிர்ணயம் செய்து கி.பி.1346–ல் கோயில பூசை வழிபாட்டுக்கு நிலம் வழங்கி உள்ளான்.

விஜயநகர மன்னர் கம்பனார் காலத்தில் 1367–ல் நிலம் வழங்கப்பட்டுள்ளது. கண்





www.aanmeegamalar.com

ணாரமுதன் பல்லவராயன் பெயர் தூண் ஒன்றில் உள்ளது. இரண்டாம் தேவராயன் ஆட்சியின் போது கி.பி.1436–ல் திருமடை விளாகத்தில் குடியிருப்போர் செலுத்தவேண்டிய பட்டடை முலயம் என்ற தறிக்கான வரியை தறி ஒன்றுக்கு இரண்டு பொன் வரியாக கைக்கோளி டமிருந்துவசூலிக்கப்பட்டதாக கல்வெட்டு செய்தி உள்ளது. கம்பணன் காலத்தில் வராகப்பிள்ளை நிலக்கொடை அளித்துள்ளான் கி.பி.1533–ல் அச்சுத தேவர் காலத்தில் மண்டபம் கட்டப்பட்டு ஒபதாசநல்லூர் தானமாக வழங்கப்பட்டுள்ளது..



### ஆலய அமைப்பு:

இறைவன் பெயர் திருவாலீஸ்வரர். அம்மன் பெயர் ஸ்ரீதிரிபுரசுந்தரி.

ஆலய முகப்பு கோபுரம் தெற்கு திசையில் மூன்று நிலைகளுடன் பழுதடைந்து உள்ளது. ஆலயம் எதிரில் நந்தியும் பலிபீடமும் அமைந் துள்ளது. நாகராஜருக்கு ஏற்பட்ட தோஷ நிவர்த் திக்காக சிவனை அழைத்து வந்து சூரியனையும் சந்திரனையும் வழிபட்டதாக கூறுகின்றார்கள்.





வேலன்

இதற்கான சிற்பம் மேற்கூரையில் அமைந் துள்ளது. இறைவன் கிழக்கு திசை நோக்கி அருள்பாலிக்கின்றார். இறைவனை நோக்கியவாறு சூரியனார் சிலை உள்ளது. கருவறையின் முன் புறம் தூவர வினாயகர். துவார முருகர் சிலைகள்



உள்ளது. தூவர வினாயகர் சுயம்பு வினாயகர் என சொல்கின்றார்கள்.

இறைவன் திருவாலீஸ்வரர் மேனிமீது உத்ராணயம் காலத்தில் சூரியனின் கதிர்கள் விழுகின்றன. அதப்போல இறைவன் சிரசு மீது மூன்றாம் பிறை சந்திரனும் பௌர்ணமியில் சந்திரன் ஒளியும் படுகின்றது. அதற்கேற்றபடி கருவறையின் மேலே மரத்திலான சிறிய ஜன்னல் வைத்துள்ளார்கள். இவ்வளவு காலம் கடந்தும் ஜன்னலின் மரங்கள் நன்றாக உள்ளது.

இறைவனின் இடதுபுறம் நாகவாகனத்தில் கிருஷ்ணசிலையும் அடுத்த நாகவாகனத்தில் சிவன் சிலைகளும் அருகருகே அமைந்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக முருகன் கார்த்திகை பெண்டிருக்கு ஆறு குழந்தையாக பிறந்தார்.

அதில் இரண்டாவதாக பிறந்த பாலகுரு என்று அழைக்கப்படும் 4 அடி உயர முருகர் சிலை இங்கு உள்ளது. அதன் ஒரு கை யில் ருத்ராட்ச மாலையும் மறு கையில் சிவ லிங்கமும் உள்ளது. காணக்கிடைக்காத காட்சியாகும். அதன் பக்கத்தில் அம்பாள் நான்கு அடி உயரத்தில் தெற்கு திசைநோக்கி நமக்குஅருள்பாலிக்கின்றார்.

ஸ்ரீதிரிபுரசுந்தரி அம்மனே இங்கு பிரதான கடவுளாகும். தெற்கு கோபுரமும் அம்பாளை நோக்கியே அமைந்துள்ளது. அம்பாளுக்கு அடுத்தபடியாக பைரவர் காட்சியளிக்கின்றார். கருவறையை சுற்றி வருகையில் வினாயகர் சிலை உள்ளது. அடுத்துள்ள தட்சணமூர்த்தி சிலை இல்லாமல் உள்ளது.

இதுகுறித்து அர்ச்சகரிடம் கேட்கையில் சிலை பின்னப்பட்டதால் குளத்தில் விட்டுவிட்டதாக சொன்னார்கள். அதற்கு அடுத்து பிரம்மா விஷ்ணு துர்கைசிலைகள் உள்ளது. ஆலயத்திற்கு அருகில் பெரிய குளம் உள்ளது.

**ஆலய சிறப்பு:** கடகராசி கடக லக்கனத்தில் நாக தோஷம் உள்ளவர்கள் இங்குள்ள சிவனுக்கு அபிஷேகம் செய்து அம்மனை பிராத்தனை செய்துகொண்டு வந்தால் நாக தோஷம் நிவர்த்தியாகி திருமணம் விரைந்து நடைபெறுவதாக அர்ச்சகர் தெரிவித்தார்.

**– வேலன், போன்: 9894836096**
**திருக்கழுக்குன்றம்.**

## ஆலயத்தின் தற்போதைய நிலை




ஆலயம் மிகவும் பழுதடைந்துள்ளது. 1000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கோயில் இதனால் தொல்பொருள் துறையினர் கோயிலினை எடுத்து பழமை மாறாமல் புதுப்பித்தால் நன்றாக இருக்கும்.

அவர்கள்புதுப்பிக்க விரும்பாவிடில்இந்துசமய அற நிலையத் துறை ஆலயத்தினை பழமை மாறாமல் புதுப்பிக்கலாம். ஆன்மிக அன்பர்களும் இத்திருக்கோவில் புதுபிக்க முயற்சி மேற்கொண்டால் சிவனருள் பரிபூரணமாக கிடைக்கும்.

ஆலய தொடர்புக்கு: திரு சம்பத்குமார்
போன்:8870030252, 9677607147.

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# வாஸ்து பகவானும் அவருக்குரிய காலமும் நேரமும்

சிவனின் அம்சமான வாஸ்து பகவானின் வரலாறு மிகவும் சுவாரஸ்யமானது, கும்ப கர்ணணைவிட மிகுந்த நித்திரை கொண்டவர் வாஸ்துபகவான். இவர் வருடத்திற்கு எட்டு நாட்கள் மட்டுமே விழித்திருப்பார், அந்த விழிப்பு நாட்களை அறிந்து அவரை வழிபட்டால் அதித பலன் கிடைக்கும். இதைப்பற்றி விரிவாக பார்ப்போம்...

"அந்தகாசுரன்" என்று ஒரு அசுரன், தேவர்களுக்கு மிகுந்த தொல்லைகள் கொடுத்து அவர்களை துன்புறுத்தி வந்தான் அந்த அசுரனின் தொல்லைகள் தாங்காமல் தேவர்கள் ஒன்று கூடி சிவபெருமானிடம் முறையிட்டு தங்களை காப்பாற்றும்படி வேண்டினார்கள்.




தேவர்களின் கோரிக்கையை கேட்ட சிவபெருமான், அந்த அசுரன் மீது மிகுந்த கோபம்கொண்டு, அவனை அழிக்க அசுரனிடம் போரிட்டார்.

அப்போது சிவபெருமானின் வியர்வை பூமியில் சிதறி விழுந்தது, அந்த வியர்வையில் இருந்து, மிக பெரிய பூதம் போன்ற உருவம் வெளிப்பட்டது.

அந்த மிக பெரிய பூதம், சிவபெருமானைநோக்கி, இப்போது எனக்கு என்ன பணி என்று கேட்டது. உடன், சிவபெருமான், அந்தகாசுரன் மற்றும் அவனுடன் உள்ள அசுரர்களை அழிக்க சொல்கிறார்.

அந்த மிக பெரிய பூதம், உடனடியாக. அந்தகாசுரனையும், அவனுடன் இருந்த அசுரர்களையும். அழித்தது. அப்படி கொல்லப்பட்ட அசுரர்களின் உடல் பூமியெங்கும் சிதறி விழுந்தது.

அடுத்து என்ன பணி ( வேலை ) என்று அந்த பூதம் கேட்டது.

சிதறி கிடக்கும் அசுரர்களின் உயிரற்ற உடல் களை அப்புறப்படுத்த சொல்கிறார். உடனடியாக அந்த பூதம் போன்ற உருவம் செய்துமுடித்தது.

அந்த பூதம் மிகுந்த பசியுடன் இருந்ததால் பசி, பசி, என்று அலறியது. தன் பசிக்காக பூமியை விழுங்க முயன்றது.

பிரம்மா மற்றும் தேவர்கள் அந்த பூதம் போன்ற உருவத்தை கீழே தள்ளி, எழ முடியாதவாறு அழுத்தி பிடித்து கொண்டனர். பசியால் வாடிய பூதத்தை நோக்கிய சிவபெருமான், "இன்று முதல் நீ வாஸ்து புருஷன் என்று அழைக்கப்படுவாய் என்றும்,






இப்போது "உன் வேலை முடிந்து விட்டது இனி நீ பூமியில் படுத்து உறங்கு வருஷத்தில் எட்டு நாட்கள் மட்டும் விழித்து எழுந்து எனக்கு பூஜை செய்" என்றார்.

அதன்படி, வருஷத்தில் எட்டுநாட்கள் மட்டும் வாஸ்து புருஷன் விழித்து எழுகிறார், அப்படி அவர் விழித்து எழும் நாளில், அவரை வணங்கி வழிபட்டால், மக்கள் வாழும் இடங்களை, ஐஸ்வர்யம். உண்டாகும்படி செய்து, மக்களுக்கும் அந்த மனை, வீட்டுக்கும் அருள் புரிவார்.

கூடவே, ஐஸ்வர்யங்களை வாரி வழங்குவார் என்றும் கூறப்படுகிறது.

வாஸ்து பகவான் பூமியில் விழித்து இருக்கும் காலம் நேரம்:

ஆம். வாஸ்து பகவான். வருஷத்தில். எட்டு. நாள் மட்டுமே விழித்து இருப்பார் .

- ❖ சித்திரை மாதம் 10–ஆம் நாள் காலை 8.54 முதல் 10.30 வரை
- ❖ வைகாசி மாதம் 21–ஆம் நாள் காலை 10.06 முதல் 10.42 வரை
- ❖ ஆடி மாதம் 11–ஆம் நாள் காலை 7.42 முதல் 8.18 வரை
- ❖ ஆவணி மாதம் 6–ஆம் நாள் காலை 3.16 முதல் 3.54 வரை
- ❖ ஐப்பசி மாதம் 11–ஆம் நாள் காலை 7.42 முதல் 8.18 வரை
- ❖ கார்த்திகை மாதம் 8–ஆம் நாள் காலை 10.54.முதல் 11.30 வரை
- ❖ தை மாதம் 12–ஆம் நாள் காலை 10.06 முதல் 10.42 வரை
- ❖ மாசி மாதம் 22–ஆம் நாள் காலை 10.06 முதல் 10.42 வரை

இப்படி வருஷத்தில் எட்டு நாட்கள் 36 நிமிஷம் மட்டுமே வாஸ்து பகவான் விழித்து இருப்பார் இந்த நேரத்தில் வீடு கட்டுபவர்கள், மனை பூஜை தொடங்கி முடித்தால், வீட்டு வேலைகள் தங்கு தடையின்றி தொடரும், கூடவே, மனையில் உள்ள துர்தேவதைகள் வாஸ்து பகவானால் துரத்தி அடிக்கபடும்.


கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன்

ஐஸ்வரியங்கள் கிடைக்கும், தவிர, தெரிந்தோ, தெரியாமலோ உரிய நியமங்கள் ஏதுமின்றி, வீடு கட்டியிருந்தாலும், வாஸ்து பகவானை வணங்கி வந்தால் சகல, வில்லங்கங்களும் விலகி ஐஸ்வர்யம் நிச்சயமாக கிடைக்கும். வீடுகளில் பூஜை அறையில், குலதெய்வம், இஷ்ட தெய்வம், கிராம தெய்வம் ஆகியவற்றை விளக்கேற்றி "பூ"க்களால் அர்ச்சனை செய்து தூப ஆராதனை செய்துவந்தால் வாஸ்துபகவான் மனம் குளிர்ந்து மகிழ்ந்து அருள் புரிந்து, அனைத்து ஐஸ்வர்யங்களையும் வழங்குவார்.

– கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன், பெங்களூரு 77.
தொலைபேசி 9972466443

# விநாயகரின் உருவம் எவ்வாறு அமைப்பது? எப்படி பூஜிப்பது?

விநாயகரின் திருவுருவத்தை மரம், செம்பு முதலியவற்றாலும், மண், பசுஞ்சாணி, மஞ்சள், மாக்கல், கருங்கல், வெள்ளைச் சலவைக் கல், முத்து, பவழம், யானைத் தந்தம், வெள்ளெருக் கின் வேர், அத்திமரம், அரைந்த சந்தனம், சர்க்கரை போன்ற ஏதேனும் ஒன்றால் செய்து வழிபடலாம்.

அந்தப் பிம்பத்தை 21 அருகம்புற்களால் விநாயகப் பெருமானின் பலவிதப் பெயர்களைச் சொல்லியும், விநாயகரின் அஷ்டோத்திரத்தைச் சொல்லியும் அர்ச்சனை செய்ய வேண்டும்.

# கொழுக்கட்டை படைப்பது ஏன்?

விநாயகர் சதுர்த்தியன்று கொழுக்கட்டைப் பிடித்து நிவேதனம் செய்வது முக்கியமானது. எள் கொழுக்கட்டை சனி பீடையையும், உளுந் தம் கொழுக்கட்டை ராகு தோஷத்தையும், வெளியே உள்ள அரிசி மாவு குரு சுக்கிர ப்ரீதி யைப் பெற்றுத் தரும்.

கொழுக்கட்டை வைத்து விநாயகரை வழிபட் டால், எக்காலத்திலும் தம் கஷ்டங்கள் யாவும் நீங்கப் பெறுவார்கள். வினைப் பயன்களால் உண்டாகும் நோய்கள் அவர்களைத் தீண்டாது. விநாயகரின் அருளால் விக்னங்கள்யாவும் அகலும்.

சந்தான சௌபாக்யத்துடன் அனைத்துக் கலைஞானமும் பெற்று ஆரோக்யமாய் அரும் பெரும் வாழ்வு வாழ கணபதியின் திருவருள் துணை நிற்கும்.

# விநாயகருக்கு ஐந்து கரங்கள் ஏன்?

விநாயகருக்கு ஐந்து கரங்கள் உண்டு. ஒரு கையை தாய், தந்தையரான பரமசிவம்பார்வதிக் கும், மற்றொரு கையைத் தேவர்களின் நலம் பொருட்டும், ஒரு கையைத் தன் பொருட்டும், இரு கைகளை பக்தர்களுகு உதவுவதன் பொருட்டும் வைத்திருக்கிறார் என்று தணிகைப் புராணம் கூறுகிறது.

'ஓம்' என்ற எழுத்தின் வடிவமாய் ஓங்கார ரூபத்தில் எழுந்தருளி இருக்கும் சகல ஞானத் திற்கும் அதிபதியான விநாயகரைத் தொழும் சிறந்த நாள் விநாயகர் சதுர்த்தி நாளே.

# தடையை நீக்குபவர்

'வி' என்பதற்கு 'இல்லை' என்று பொருள். 'நாயகன்' என்றால் 'தலைவன்' என்று பொருள்.

விநாயகருக்கு மற்றொரு பெயர் விக்னேஸ் வரர். 'விக்னம்' என்றால் 'தடை' என்று பொருள். 'தடைகளை நீக்குகின்ற ஈஸ்வரன்' என்பதனால் இப்பெயர் பெற்றார்.

# குட்டுப்பட்டாலும் மோதகக் கைகளால் குட்டுப்படவேண்டும்

"குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால்குட்டுப் பட வேண்டும்" என்ற பழமொழி யை கேட் டிருப்பீங்க. உண்மையிலேயே "குட்டுப்பட்டாலும்மோதகக் கையால் குட்டுப்பட வேண் டும்" என்பதுதான்இதன் அர்த்தம். விநாய கரைத் தவிர நாம் வேறு எந்தத் தெய்வத்தின் முன்னாலும் நாம் குட்டுப் போட்டுக் கொள்வதில்லை. ஆனால் தினமும் விநாயகர் முன் னால் இதனைச் செய்கிறோம்.



## பராசக்திக்கு உதவிய விநாயகர்

பராசக்தி தேவி பண்டாசுர வதத்திற்குக் கிளம்பினாள். ஆனால் விக்னயந்திரம் அதற்கு இடையூறாக இருந்தது. சக்திதேவி சிவனையும் கணபதியையும் நினைக்க, கணபதி அந்த விக்னயந்திரத்தைத் தூளாக்கினார். அதன் பிறகே பராசக்தியால் பண்டாசுர வதம் செய்ய முடிந்தது.

# இரண்டுமுறை குட்டு பட்ட விநாயகர்

## தமிழகத்திற்கு காவிரியையும், ஸ்ரீரங்கநாதனையும் தந்தவர்

அகஸ்தியர் தமது கமண்டத்தில் எடுத்துச் சென்ற காவிரியை மீண்டும் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க கணபதியே காரணம்,

ஸ்ரீராமர் தான் வழிபட்ட ரங்க நாதர் விக்ரகத்தை விபீஷணனுக்குக் கொடுத்தார். கொடுக்கும் போது ஒரு நிபந்தனையையும் வைத்தார். எக்காரணம் கொண்டும் இந்த விக் கிரகத்தை கீழே வைக்கக்கூடாது என்பது அந்த நிபந்தனை...

அதைப் பெற்றுக் கொண்டு இலங்கை நோக்கி வந்த விபீஷணன், ஸ்ரீரங்கம் பகுதியை அடைந்த போது மாலை நேரமாகி விட்டது. மாலைச்சந்தி கர்மங்களைச் செய்ய வேண்டுமே என யோசித்தபோது, விநாயகர் ஒரு சிறுவன் வடிவில் எதிரே வந்தார்.




அந்தச் சிறுவனிடம் சற்று நேரம் விக்ரகத் தைக் கையில் வைத்திருக்குமாறு கொடுத்த விபீஷணன் ஆற்றங்கரை நோக்கிச் சென்றான். அவன் திரும்பிவந்து பெற்றுக் கொள்வதற்குள் அதைத் தரையில் வைத்துவிட்டார் விநாயகர். அச்சிலை அங்கேயே நிலை கொண்டு விட்டது. விக்ரகத்தைப் பெயர்த்தெடுக்க எவ்வளவோ முயன்றான் விபீஷணன். ஆனால் இயலவில்லை.

அந்த ஆத்திரத்தில் சிறுவனின் தலையில் ஓடிப்போய் குட்டினான். பின்னர் உண்மை அறிந்து வணங்கிச் சென்றான். அவ்வாறு கோயில் கொண்டவரே ஸ்ரீரங்கநாதர். திருச்சி மலைமீதிருக்கும் உச்சிப் பிள்ளையாரே இந்தத் திருவிளையாடல் புரிந்தவர். அவர் தலையில் குட்டுப்பட்ட தழும்பு இருப்பதைக் காணலாம்.

## கர்நாடகாவிற்கு கோகர்ணம் சிவாலயத்தை தந்த விநாயகர்




ஸ்ரீ ரங்க நிகழ்வைப் போன்று இராவணனிடமும் ஒரு விளையாட்டை நிகழ்த்தினார் பிள்ளையார்.

இராவணன் தவம் பல புரிந்து சிவனிடம் வரம் பெற்று, அவரிடமிருந்து ஆத்மலிங்கத் தைப் பெற்றுக்கொண்டு இலங்கை திரும்பிக்கொண் டிருந்தான். அவனும் சிறுவன் வடிவில் வந்த விநாயகரிடம் ஆத்ம லிங்கத்தைத் தர, அதைத் தரையில் வைத்துவிட்டார் விநாயகர்.

அதுவே கர்நாடக மாநிலத்திலுள்ள கோகர்ணம், இங்கும் இராவணன் கோபம் கொண்டு, கணபதி தலையில் குட்டினான், இந்த வடுவை காணலாம்.

# அன்பு வைத்தால் கடவுள் தனது நிலையிலிருந்து கீழிறங்கி வந்து நம்மோடு பழகுவான்

இனி சாம வேதத்தின் இரண்டாவது சம்ஹிதை யிலுள்ள இந்திரனை துதிக்கும் ஒரு பாடலை பார்ப்போம்.

உலகிலுள்ள அனைத்து உயிர்களும் இந்திரனை வணங்குகின்றன, வாழ்த்துகின்றன. நமக்கு கிடைத்திருக்கும் பசுகளும் செல்வங்களும் அவன் தந்ததே ஆகும். பலம் மிகுந்த காளையை போல் காட்சி தரும் இந்திரன் ஒருவனே நமக்கெல்லாம் தலைவன் ஆவான். சோமபானத்தைக் கொண்டு நடத்தப்படும் தெய்வீகம் சடங்குகள் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் நமக்கெல்லாம் வழி காட்டும் தலைவனாகவும், அரவணைக்கும் தாயாகவும், அனுக்கிரகம் செய்யும் தெய்வமாகவும் திகழும் தன்னிகரற்ற இந்திரனை போற்றி பாடுவோம். அவனைப் பாடுவதற்காக அடிவயிற்றிலிருந்து பெருங்குரலை எழுப்புங் கள். இந்த குரல் ஒசைகள் நமது ஆத்மாவோடு இணையட்டும்.

நூறு யாகங்களை செய்து பெரும் ஆற்றல் பெற்ற இந்திரன் என்ற தேவாதி தேவா உன்னை தவிர இத்தகைய ஆற்றலை வேறு யார் பெறமுடியும். அதனால் தான் எல்லா தெய் வங்களும் உன் பின்னால் அணிவகுத்து நிற்கின்றன.

நீ அவர்களின் தன்னிகரற்ற தலைவன் அல்லவா. உன்னை புகழ்ந்து பாடும் சொற்களால் நீ மட்டுமா சந்தோஷப்படுகிறாய் அந்த சொற்களை பயன்படுத்தும் நாங்களும் தான் மகிழ்வென்னும் பால் குடத்தில் மூழ்கி ஆனந்தக்களிப்படைகிறோம். உனது கருணை என்னும் பெரிய கவசங்கள்



எங்களை பாதுகாக்கும் போது நாங்கள் யாரை பார்த்து பயப்பட போகிறோம். யார் தான் எங்களுக்கு துன்பம் தர இயலும். உனது அருள் பார்வை ஒன்றே எங்களது துயரங்களை தூர விலக்கி விடும்.




தேவர்களை தலைவனாகஇருக்கும் இந்திரன் மழையின் அதிபதி. ஆகாயத் திலுள்ள வண்ண முகில்களை தேர்களாக்கி பவனி வந்துகொண்டிருக்கும் ஆற்றல் மிகுந்த அந்த தெய்வத்தின் பெருமைகளை எடுத்துரைத்த நமது குரல்கள் ஓங்கி ஒலிக்கட்டும். அந்த தேவ னின் காதுகளில் மின்னல்கள் குண்டலங்களாக ஒளி வீசுகின்றன. அவன் விரல் அசைவுகளில் இடி முழக்கங்கள் கட்டுப்பட்டு கர்ஜனை செய்கின்றன. அவனது அருளால் இந்த பூமி நனைந்து குளிர்கிறது. பச்சை பசுஞ் செடிகள் அவன் அருளுக்கு தலை சாய்த்து வணக்கம் செலுத்துகிறது.




உயர் தகுதி உடைய ரிஷிகளின் புதல்வர் களே நீங்கள் தெய்வங்களின் புகழைப் பாடி கொண்டாடுங்கள். உங்கள் கொண்டாட்ட கோலாகலத்தில் நெருப்பின் நாக்குகள் ஜொலிக்கட்டும். உங்கள் ஆத்மாக்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணை யட்டும். இந்த தெய்வம் நாம் விரைந்து செல்வதற்கு தேர்களையும், குதிரைகளையும் கொடுத்திருக்கிறது. நமது சரீரம் ஊட்டம் பெறுவதற்காக ஏராளமான பால் பசுக்களை தந்திருக்கிறது. நமது வாழ்வு முடிவு பெற்று மரணத்தின் வாசலை நாம் தொடுகின்ற பொழுது சொர்க்கத்தையும் நமக்காக தருகிறது.

விராடன் என்ற கொடிய அசுரனை அழித்து நம்மையும் தேவர்களையும் காத்தவன் இந்திரனே ஆவான். அப்படி காத்த அவனை பாராட்டுவது நமது கடமை அன்றோ புனித மான சடங்குகளின் போது தேவர் தலைவனை பாரட்ட புதிது புதிதான பாடல்களை அமைத்து அவனுக்கு பரிசாகக் கொடுப் போம்.

வல்லமை படைத்த இந்திரனே! நீ மழையை கொடுத்து மண்ணை வளப்படுத்தி நாங்கள் கணக்கில் அடங் காத செல்வங்களை பெற காரணமாக அமைகிறாய். இத்தகைய செயல்களை தனி ஒருவனாக செய்கின்ற ஆற்றல் உனக்கு உண்டு என் றாலும் பல தேவதைகளுக்கு புகழ் வந்து சேரவேண்டும் என்பதற்காக பணிகளை பங்கிட்டும் கொடுக்கிறாய்.

நாம் புனிதமான முறையில் சடங்குகளை செய்தால் இந்திரன் இன்பம் அடைகிறான். ஏனென்றால் இந்தப் புனித சடங்குகள் இந்திரனை வளரச் செய்கிறது. வளம் பெறச் செய்கிறது. புயல் காற்றாக இந்த உலகத்தை அவன் வலம் வருகிறான். தனது புன்னகை என்னும் இடி முழக்கங்களால் தேவர்கள் வாழும்





மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


சொர்க்கத்தையும் அதிரச் செய்கிறான்.

இந்திரனே! அனைத்து செல்வங்களுக்கும், அனைத்து வளங்களுக்கும் நீயே தலைவன். உன்னை போல நாங்களும் அந்த நிலையை அடைய எங்களுக்கு உதவுவாயாக. உன்னை துதித்துப்பாடும் அனைவரின் இல்லங்களிலும் பசுக் கூட்டம் நிறையட்டும்.

நமது சடங்குகளில் வளர்கின்ற நெருப்பு இந்திரனின் இதயத்தை குளிர்விக்கிறது. சோமபானத்தின் தலைவனான அவன் அதை தயாரிக்கும் உங்களுக்கு அன்பு மிகுதியால் பல நன்மைகளை குவித்து தருவான்.

தேவர்களின் தலைவா! இது உனது பானம் உயர்ந்த முறையில் தயாராகி விட்டது. கோவைப் பழம் போல் சிவந்திருந்தாலும் உறுதி மிக்க உனது உதடுகள் சோம ரசத்தை ருசி பார்க்கட்டும். இதன் இனிமை உன்னை பரவசப்படுத்தும். உன் மூலமாக சோமபானத்தை பெற்றுக் கொள்ளும் மற்ற தேவதைகளும் எங்களை ஆசிர்வதிக்கட்டும்.

உனது கட்டளையை பெற்று அந்த தேவர்கள் எல்லா உதவிகளையும் எங்களுக்கு செய்யட்டும். எங்களை பயம் என்ற உணர்விலிருந்து காப்பாற்றும் இந்திரனே உன்னுடன் சேர்ந்து நாங்களும் இந்த ரசத்தை அருந்துகிறோம்.

வருணன் நமக்கு அறிவாற்றலை வாரி வழங்குகிறான். நமது ஞானத்தையும் வளர செய்கிறான்.நாம் இன்று பெற்றிருக்கும் அறிவு எல்லாமே அவனிடமிருந்து வந்தவைகள் தான். அவனே தான் நமது ஞான குரு. அவன் நமது அருகாமையில் இருக்கும் பொழுது அறியாமை என்ற அரக்கன் நம்மை தொட்டு விட முடியுமா.

தமது ஆசை விரல்களால் நம்மை சுட்டு விட முடியுமா. மித்திரன், ஆரியமன் என்கின்ற தேவதைகளும் நம்மை பாதுகாக்கின்றன. இவர்கள் நம்மை காக்கும் பொழுது வேறு எந்த சக்தி நம்மை சாகடிக்க முடியும். வெற்றி கொள்ள முடியும். வாகை சூடுதல் என்ற ஒன்றைத் தவிர வேறு எதுவும் நம்மை அனுகாது.

நம் ஆசை என்னும் அம்பு எதன் மீது அடிக்கடி பாய்கிறதோ குதிரைகள் மீதும், தேர்களின் மீதும் தானே இவைகள் ஏராளமாக நமக்கு வேண்டும் என்று ஆசைபடுகிறோம்.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

அந்த ஆசைகள் நியாயமானவைகளாகும். நாம் இந்த பூமி எங்கும் பறந்து விரிவதற்கு இந்த ஆசைகளே நிலக்கலங்கள் ஆகும். எனவே அந்த ஆசைகள் நிச்சயம் நிறைவேரும்.

இதை நிறைவேற்றி கொடுக்கும் தெய்வங்கள் அனைத்துமே நமது அருகில் உள்ளன. அவர்களுக்கு அக்னியின் மூலமாக நாம் கொடுக்கும் ஆகுதிகள் அவர்களை மகிழ்ச்சி அடையச் செய்கிறது.

இந்த பாடலை ஊன்றி கவனிக்கும் பொழுது ஒரு உண்மை நமக்கு தெரிகிறது. இந்திரன் என்பவன் தேவர்களுக்கு தலைவனாகவும், செல்வங்களுக்கு அதிபதியாகவும், வெற்றிகளின் பிறப்பிடமாகவும், தன்னிகரற்ற ஆற்றல் பொருந்தியவனாகவும் இருந்தாலும் கூட அவன் மனிதர்களோடு சரி சமமாக எளிய நிலையில் வரக் கூடியவனாகவே கருதப்பட்டிருக்கிறான்.

உன்னுடன் சேர்ந்து நாங்களும் சோமரசம் அருந்துகிறோம் என்ற பாடலின் கருத்து நமக்கு இதை தெளிவாகப்புலப்படுத்துகிறது.

அதாவது கடவுள் உயரிய நிலையில் இருந்தாலும் அன்பினால் தனது நிலையிலிருந்து கீழிறங்கி வந்து நம்மோடு பழகுவான் என்ற வேதகால மக்களின் நம்பிக்கை ஆத்ம வளர்ச்சிக்கு முட்டு கட்டையாக அமையும். இறை அச்சமாக இல்லாமல் இறை பக்தியாக வளர்ச்சி அடைந்திருப்பதை கவனத்துடன் பார்க்க வேண்டும்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

# விநாயகர் சதுர்த்தி விழாவும் பிரசித்தி பெற்ற வரலாறும்





விநாயகர் லிங்க புராணக் கதையின் படி அரக்கர்களின் கொடுமைகளிலிருந்து தங்களைக் காத்திட சிவபெருமானை நோக்கி தேவர்கள் தவமிருந்ததாகவும், அவர்களின் வேண்டுதலின் பயனாகத் தடைகளை தகர்த்தெறியும் ஆற்றலுடன் சிவபெருமான் மற்றும் பார்வதி தேவியால் உருவாக்கப்பட்டவரே விக்ன விநாயகர் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தியாவில் விநாயகர் சதுர்த்தி மற்ற மாநிலங்களை விட, மகாராஷ்டிரா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கோவா உள்ளிட்ட மாநிலங்களில் விமர்சையாக பத்து நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது.

வெளி நாடுகளில் வாழும் இந்தியமக்களாலும் இவ்விழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி கொண்டாடத்தின் ஆரம்ப காலங்களில் அரச மரத்தடி விநாயகராகவே இருந்த விழா, இன்றைய காலகட்டத்தில் விநாயகர் சதுர்த்தியின் போது பக்தர்களால் ஊரெங்கும் பந்தல்கள் அமைத்து தற்காலிகமாக விநாயகர் சிலைகள் நிறுவி பூஜைகளை மேற்கொள்கின்றனர்.

வடமாநிலங்களில் நிறுவப்படும் விநாயகர் சிலைகள் அரை அடி முதல் 70, 100, 150 அடி வரை வசதிக்கேற்ப விதவிதமாக செய்யப்படுகின்றன.

## நீரில் கரையும் கணேசா..!

விநாயகர் சிலை நீர் நிலைகளில் கரைக்கப் படுவதற்கான புராண விளக்கமாக விநாயகரை நீரில் கரைக்கும் போது உயிர்ப்பிலிருந்து விடுபடுகிறான். பஞ்சபூதமான நீரில் கரைந்து மீண்டும் மண்ணாகவே மாறுகிறான் போன்ற விளக்கம் அளிக்கப்படுகிறது.

நீரில் கரைப்பதன் அறிவியல் காரணம் விநாயகர் சிலையை நீரில் கரைப்பதற்கு அறிவியல் காரணங்களும் உண்டு. அதில் குறிப்பாக, ஆடிப் பெருக்கு அன்று வெள்ளம் ஏற்பட்டு ஆற்றில் உள்ள மணலை எல்லாம் வெள்ள நீர் அடித்துச் சென்றுவிடும்.

இதனால் அந்த இடத்தில் நீர் தங்காமல் நிலத்தடி நீர் குறைவு ஏற்படும். இதனைச் சீர் செய்யவே கெட்டியாகத் தங்கிடும் களிமண்ணினால் செய்த விநாயகர் சிலையைக் குறிப்பிட்ட நாட்கள் கழித்து ஆற்று நீர் உள்ளிட்ட நீர் நிலையில் கரைத்தனர்.

## விநாயகர் சதுர்த்தி விமர்சியாக கொண்டாட காரணமானவர்கள்

மன்னர் சத்ரபதி சிவாஜியின் காலம் முதல் விநாயகர் சதுர்த்தி விழா பிரபலமாகிவிட்டதாக வரலாறு உள்ளது. இன்று நாம் பார்க்கும் விநாயகர் விழா கொண்டாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் இந்திய விடுதலை இயக்கத்தின் முதல் தலைவரான பாலகங்காதர திலகர்.

1893 ம் ஆண்டு சர்வஜன கனேஷ் உத்சவ் என்னும் பெயரில் இவர் ஆரம்பித்த விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டமே இன்றுவரை மக்கள் மத்தியில் மிகப்பெரிய விழாவாக வருடம் தோறும் கொண்டாடப்படுகிறது.



www.aanmeegamalar.com

# பிரபஞ்ச உணர்வு நிலையை அடைய மூன்று மார்க்கங்கள்




குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் அருளுகிறார்: "எண்ணத்தின் ஒரு சிறிய அதிர்வோ அல்லது மன அமைதியின்மையோ உள்ளவரை பிரபஞ்ச உணர்வு நிலையை நீங்கள் அடைய முடியாது. ஸெல்ஃப் ரியலைசேஷன் (யோகதா சத் சங்க) ஒருமுகப்படுத்தும் உத்தி ஒருவருடைய ஒருமுகப்படுத்தும் தரத்தையும் சக்தியையும் செம்மைப்படுத்துவதற்கு பெரிதும் உதவுகிறது. இதன் பயிற்சி பேரார்வமுள்ள சாதகரை, ஆழ்மனத்தளத்தில் வருடக்கணக்காக பலனின்றி அலைந்து கொண்டிருப்பதிலிருந்துக் காப்பாற்றும், அந்தத் தளத்தை நீங்கள் தவிர்க்க விரும்புகிறீர்கள். அது மாயையும் கற்பனையால் ஏற்படும் ஆன்மீக அனுபவங்களும் நிறைந்தது. உண்மையான ஆன்மீக அனுபவங்களையும் மெய் ஞானத்தையும் பெறுவதற்கு ஒருவர் உயர் உணர்வு நிலையை அடைய வேண்டும்."

"உண்மையின் மார்க்கத்தை உறுதியாகப் பின்பற்றுங்கள். ஆயிரக்கணக் கானவர்களில் ஒரு சிலரே இறைவனை நாடுகின்றனர். மேலும் அவ்வாறு நாடுபவர்களில் ஒருக்கால் ஒருவர் மட்டுமே உண்மையில் இறைவனை அறிகின்றார்" (கீதை அத்.7 ஸ்லோகம்.3) என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். விடாமுயற்சியுள்ள ஒருவர் இறைவனை அறிவார். ஆகவே தினமும் தியானம் செய்வதை உங்கள் வாழ்க்கையின் ஒரு முறையான அனுபவமாக ஆக்கிக்கொள்ள உங்களால் இயன்ற அளவு முயலுங்கள். இறைவனை எப்பொழுதும் மறக்காமலும் அவனைக் காணும் வரை திருப்தியுறா வண்ணமும் இருப்பீர்களாக! "இந்த எல்லைக்குட்பட்ட கட்டமைப்பின் பின்னணியில் நான் எல்லையற்றவனை உணர்கிறேன்," எனக்கூற முடியுமாறு இருங்கள். அவன் என்னுடன் உள்ளான் என்பதை நான் உணரும் வரை இந்த வகுப்புகளுக்கு நான் ஒரு போதும் வருவதில்லை. அந்த முழுமையான இறைத்தொடர்பை ஏற்படுத்தினாலொழிய நான் ஒருபோதும் போதிப்பதில்லை. அந்த நிலையிலிருந்து நான் உரையாற்றும்போது, மாணவர்கள் தாம் கற்றுக்கொண்டதை மறக்க மாட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியும் என்கிறார் அன்புமிக்க குருதேவர்.

பிரபஞ்ச உணர்வு நிலையை அடைவதற்கான முதல் மார்க்கம்.

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: "மானிட உணர்வுநிலையை பிரபஞ்ச உணர்வு நிலையினுள்

விரிவுபடுத்துவதற்கான மூன்று மார்க்கங்களில் முதலாவது 'நான்' என்பதை விடுத்து அனைவருக்குமாக வாழும் சமூக மார்க்கமாகும். உங்களுடைய நண்பர்களிடம் விசுவாசமாக இருங்கள். மேலும் அனைவரிடமும் அன்பு பாராட்டுங்கள். மற்றவர்களைப் பேணிக்காத்து அவர்களுக்காக உழைப்பதின் மூலம் நீங்கள் உங்கள் உணர்வு நிலையை விரிவுபடுத்திக்கொள்ளலாம் என்பதற்காகவே இறைவன் உங்களுக்கு ஒரு குடும்பத்தைத் தந்திருக்கிறான். குடும்பவாழ்வில் நாம் நமது அன்பிற்குரியவர்களுக்காக அன்பையும், சுய தியாகத்தையும் கற்றுக்கொள்கிறோம். இவ்வாறாக உணர்வு நிலையின் சிறிது விரிவாக்கத்தை எய்துகிறோம். ஆனால் இது போதாது. தனிப்பட்ட முறையில் காட்டப்படும் அன்பு பிரத்யேகமானதாகிறது. வரையறைக்குட்தாகிறது. அன்பு, தனி ஒருவரை சாராத பர அன்பாகும்போது அது விரிவடைகிறது. பரஅன்பினை வளர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்தின்மேல் காட்டும் அதே அன்பினை ஒவ்வொருவருக்கும் கொடுக்கவும். உங்களுக்கு என்ன செய்துகொள்வீர்களோ அதே மாதிரி மற்றவர்களுக்கும் செய்ய வல்லவராகவும் இருங்கள். அனைவரிடமும் இவ்விதமாக நடந்துகொள்வது பிரபஞ்ச உணர்வு நிலையாகிய சமூக மார்க்கமாகும்."

"இறைவன் தனது குழந்தைகள் அனைவரிடமும் ஒரே மாதிரியான அன்பைச் செலுத்துகிறான். அவர்கள் அனைவரும் அவனுடைய தெய்வீகக் குடும்பத்தினர். அத்துடன் அவனுடைய அன்பு, பர அன்பாகும். அவனுடைய குழந்தைகளும் ஒருவருக்கொருவர் அதே மாதிரியான அன்பை அளிக்க வேண்டும். இதுதான் தெய்வீகத் திட்டம். இதை மறப்பது துன்பப்படுவதற்கு ஒப்பாகும். உலக மனப்பாங்கு முழுவதும் மாற்றமடைய வேண்டும். நீங்களே அனைவருமாக இருக்கிறீர்கள், ஏனென்றால் உங்களது உண்மையான இயல்பானது எங்கும் நிறைந்த தன்மையாகும்."

குருதேவர் தொடர்கிறார்: "மற்றவர்களுக்கு பொருட்களைச் கொடுப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்; அவர்களுடைய ஆனந்தத்தைக் காணும்போது நான் மிகப்பெரும் மகிழ்ச்சியை உணர்கிறேன். நாம் மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் செலுத்தும்போது, படைப்பு முழுவதுமே நம்மை ஆதரிப்பதை நாம் காண்கிறோம். பிரபஞ்ச உணர்வு நிலையிலுள்ள மனிதன், ஒரு சந்தோஷமான மனிதன். அவன் மற்ற அனைவரையும் ஒதுக்கி, ஒரு சிலருக்கு மட்டும் தனது அன்பை வரையறைப்படுத்துவதில்லை. அவ்வாறே நீங்களும் முழு உலகையும் உங்களுடைய சொந்தக் குடும்பமாக்கிக்கொள்ளவேண்டும். நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்வீர்களா? இந்த உணர்வுநிலை என்னுடன் ஒவ்வொரு கணப்பொழுதும் உள்ளது. எனக்கு ஜாதியில்லை; தேசமில்லை. எல்லாரும் என்னுடையவர்கள் என நான் உணர்கிறேன். அனைத்து ஆண்களையும் உங்களுடைய சகோதரர்களாக நேசியுங்கள்; அனைத்துப் பெண்களையும் உங்கள் சகோதரிகளாக நேசியுங்கள் அத்துடன் முதியர்வள் அனைவரையும் உங்கள் பெற்றோராக நேசியுங்கள். அனைத்து மனிதர்களையும் உங்களுடைய நண்பர்களாக நேசியுங்கள்."

இரண்டாவது மார்க்கம் குருதேவர் அருளுகிறார்: "பிரபஞ்ச உணர்வு நிலைக்கான இரண்டாவது மார்க்கம் சுய ஒழுக்கமாகும். அளவு மீறுதலுக்கு பலியாகாதீர்கள். பொருட்களை அனுபவியுங்கள். ஆனால்

113
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக





மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

அவற்றுடன் பற்றற்று இருங்கள். சுதந்திரமாக இருங்கள். இனிமையானவராகவும், சுய கட்டுப்பாடு உடையராகவும் இருங்கள். தீய பழக்கங்களுக்கு அடிமையாக மாறுவதைத் தவிர்த்துவிடுங்கள். அத்துடன் உங்களுடைய தார்மீக நம்பிக்கைகளுக்கு ஏற்ப மட்டுமே செயற்படுங்கள். பிரபஞ்ச உணர்வு நிலையை அடைவதற்கு சுய கட்டுப்பாட்டைப் பெற்றிருப்பதும். அத்துடன் வெப்பம், குளிர், இன்பம், துன்பம், ஆரோக்கியம், நோய் ஆகிய இருமைகளைக் கடப்பதும் அவசியம். அனைத்தையும் எந்தவித மனக்கிளர்ச்சியோ அல்லது மனச் சோர்வோ இன்றி தாங்கிக்கொள்ள கற்றுக்கொள்ளுங்கள். எங்கும் பற்றற்றவனாய் நல்லவற்றால் மனக்கிளர்ச்சியுறாதும், தீயவற்றால் கலக்கமுறாதும் உள்ளவன் நிலைப்படுத்ப்பட்ட ஞானத்தை உடைவனாகிறான்.” (பகவத் கீதை அத் 2 ஸ்லோகம் 57)

மூன்றாவதும் மிக உயர்ந்ததுமான மார்க்கம் அன்புமிக்க குருதேவர் அருளுகிறார்: “இறுதியாக தியான மார்க்கம் பர தத்துவ மார்க்கம். நீங்கள் தியானம் செய்யும்போது, சுவாச உணர்வு உங்களுக்கு இன்னும் இருக்குமானால், நீங்கள் தேக உணர்வுடன் பிணைக்கப்பட்டுள்ளீர்கள். பிரபஞ்ச உணர்வு நிலைக்கு நுழைவதற்கு ஒருவர், குருவினால் கொடுக்கப்பட்ட தியான முறைகள் மூலம் தேகத்தின் பந்தங்களிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டும்.”

“நீர் நிறைத்து, இறுக மூடப்பட்ட ஒரு ஜாடியை ஒரு நீர்த்தொட்டிக்குள் வைத்தால் ஜாடிக்குள் உள்ள நீர் தொட்டியிலுள்ள நீரிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கும் . ஆனால் மூடியை அகற்றிவிட்டால், ஜாடியினுள் உள்ள நீரும் தொட்டியிலுள்ள நீரும் கலந்துவிடும். அதுபோலவே, சாதாரண மக்கள் இறைவனை உள்ளே விடாமல் மூடி விடுகிறார்கள். ஏனெனில் அவர்களுடைய உணர்வு நிலை அறியாமை என்னும் மூடியால் இறுக மூடப்பட்டுள்ளது. சரியான தியான முறைகளால் அந்தமூடி அகற்றப்பட்டதும், ஒருவர் தனது தேகத்தின் உள்ளேயும் வெளியேயும் இறைவனின் அமைதியை உணர்கிறார். உங்களுடைய தியானத்தின் கால அளவையும், ஆழத்தையும் அதிகரிக்கும்போது, நீங்கள் மேன்மேலும் அதிக அமைதியையும் என்றும் புதிய ஆனந்தத்தையும் காண்பீர்கள். வேறு எதைக்கொண்டு நீங்கள் முயன்றாலும் தியானத்திலிருந்து வரும் தெய்வீக உணர்வை, அது உண்டாக்க முடியாது.”

“இறைவன் எங்கும் சுற்றி நிறைந்துள்ளான். ஆனால் நீங்கள் அவனை உணர்வதில்லை. உங்களுடைய அறியாமையாகிய மூடியை அகற்றி உங்களுடைய உணர்வு நிலையை அவனுடைய உணர்வு நிலையுடன், உங்களுக்குள்ளேயே அவனைக் கண்டுபிடிப்பதாக, ஒன்று சேர்க்காதவரையில் நீங்கள் அவனை உள்ளேயோ அல்லது வெளியேயோ உணர முடியாது. லௌசீக ஆசையில் நீங்கள் மூழ்கினால், மூச்சுத்திணறுவீர்கள். இறைவனாகிய சாகரத்தில் மூழ்கினால், நீங்கள் என்றென்றைக்குமாக வாழ்வீர்கள்.”

“இறைவனை நீங்கள் கண்டுவிட்டவுடன், உண்மையானதும் நிலைத்திருப்பதுமான மன நிறைவை அனுபவிப்பீர்கள். மானிடத் தோழமை துண்டிக்கப்படலாம். ஆனால் இறைவன் உங்களை விட்டு ஒருபோதும் விலக மாட்டான். அனைவரும் உங்களைக் கைவிட்டாலும், அவனை நீங்கள் பெற்றிருந்தால், நீங்கள் அனைத்தும் பெற்றவர்களே! “ என்கிறார் அன்பு குருதேவர்.

குருதேவர் கூறியபடி இறைவனைக் கண்டடைவதற்கு ஆரவாரமோ, ஆர்ப்பாட்டமோ



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

கூடாது. முக்கியமாகக் தேவை பொறுமை. உண்மையான கல்வி என்ற தலைப்பிட்ட ஓர் உதாரணக் கதையை இங்கே குறிப்பிட விழைகின்றேன்.

ஒரு நகரத்தில் படிப்பதில் ஆர்வம் கொண்ட இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் பலதுறை கல்வியையும் கற்று முடித்தான். அவனுக்கு மேலும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அவனுக்குக் கல்வி கற்றுத்தரத் தகுதியுடைய ஆசிரியர் யாரும் அங்கு இல்லை. அந்த நகரத்திற்கு வந்த ஒருவர் அவன் நிலையை அறிந்தார். “எங்கள் ஊரில் அறிவு நிரம்பிய பெரியவர் ஒருவர் இருக்கிறார். தன் முன்னோர்கள் செய்துவந்த கொல்லன் தொழிலையே அவரும் செய்து வருகிறார். அவரிடம் நீ சென்றால் நன்கு கற்றுத் திரும்பலாம்” என்றார்.

மகிழ்ச்சியுடன் அந்தப் பெரியவரை நாடி இளைஞன் புறப்பட்டான். நாற்பது நாட்கள் பயணத்திற்குப் பின் அந்த ஊரை அடைந்தான். அந்தப் பெரியவரைக் கண்டு அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினான். அவன் தனக்கு



குருப்ரியா

கற்றுத்தருமாறு வேண்டினான். கல்வி கற்பதற்காக வந்துள்ளாயா? என்று கேட்ட அவர் உலை துருத்தியை அவன் கையில் தந்து அதை இயக்குமாறு சொன்னார். அவனும் மறுமொழி பேசாமல் அதைச் செய்து வந்தான். அவரும் அவனுக்கு ஏதும் சொல்லித்தரவில்லை. தன் கொல்லன் தொழிலை பார்த்துக் கொண்டிருந்தார். தம்மிடம் வருபவர்களிடம் உரையாடினாரே தவிர அவனிடம் ஏதும் பேசவில்லை. இப்படியே இரண்டு ஆண்டுகள் கழிந்தன. பொறுமை இழந்த அவன், “ஐயா! நான் கல்வி கற்பதற்காக தங்களிடம் வந்தேன்” என்று தொடங்கினான். ஆனால் அவரோ “நான் சொன்னபடி துருத்தியை இயக்கிக்கொண்டிரு” என்றார். அவனும் அமைதியானான். அவரிடம் நாள் தோறும் கேள்விகள் வரும். தகுதி அற்றவையாக இருப்பின் நெருப்பில் போட்டு விடுவார். தகுதி உள்ளவற்றைத் தலைப்பாகைக்குள் வைத்துக்கொள்வார். அவற்றிற்கு மாலையில் விடை தருவார். மேலும் இரண்டு ஆண்டுகள் கழிந்தன. அவனை அழைத்த அவர், “உன் கல்வி முடிந்துவிட்டது. இனி நீ உன் ஊருக்குப் போகலாம்,” என்றார். வியப்பு அடைந்த அவன், “ஐயா, தாங்கள் எனக்கு எதுவுமே சொல்லித்தரவில்லையே” என்று கேட்டான். அதற்கு அவர் “உலகத்திலுள்ள அனைத்துக் கல்வியிலும் தலையாயது பொறுமைதான். அது உனக்கு வந்து விட்டது. இனி நீ கற்பதற்கு ஒன்றும் இல்லை என்று கூறி அவனை அனுப்பிவைத்தார்.

‘உண்மையான கல்வி’ என்றால் இறைவனை அறியக் கூடிய கல்வி எனப் பொருள். அது தியானத்தால் மட்டும்தான் முடியும். இந்தக் கதையிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியதும் அதுவே! பொறுமையிருந்தால் அனைத்தும் கைவசமாகிவிடும் என்பதை இதிலிருந்து கற்றுக் கொள்ள இயலுகிறது. இறைவனை அடைய பொறுமையும் தேவை. இறைவனை அடைய மூன்று மார்க்கங்கள் தேவை என்பதை குருதேவர் உணர்த்துகிறார். அகந்தையெனும் தீய குணத்தை அகற்றி சுய ஒழுக்கத்தைக்கடைபிடித்து தியானமெனும் பாதையில் பொறுமையுடன் நகர்ந்தால் இறைவனை அல்லது பிரபஞ்ச உணர்வு நிலையை அடையலாம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

## உச்சிட்ட கணபதி

"மந்திர மகார்ணவம்" என்னும் நூலில் உச்சிட்ட கணபதியின் நிறம் சிவப்பு எனக் காணப்பட, உத்தர காமிகாகமம் கருமை என்கிறது.

வேறு சில நூல்கள் இத்திருவுருவத்தின் நிறம் நீலம் என்கின்றன. உச்சிட்ட கணபதி வடிவத்தில் கணபதிக்கு இடப்புறத்தில்தேவியின் உருவம் காணப்படும். பல எடுத்துக் காட்டுகளில் தேவியின் உருவம் கணபதியின் இடது தொடைமீது இருக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. இவ்வடிவத்தில் கணபதிக்கு ஆறு கைகள் உள்ளன. இவற்றுள் ஐந்து கைகளில் நீலோற்பலம், மாதுளம் பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை என்பவற்றை ஏந்தியிருப்பார். ஆறாவது கை தேவியைத் தழுவியிருக்கும்.



# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com



# வெள்ளெருக்கு விநாயகர்

**எருக்கஞ்செடி குடும்பத்தைச் சேர்ந்தது வெள்ளெருக்கு. நீல எருக்கு, ராம எருக்கு என ஒன்பது வகையான எருக்குகள் இருக்கின்றன**

எருக்கஞ்செடி 12 ஆண்டுகள் மழை இல்லாமல் இருந்தாலும் கூட, சூரிய ஒளி யிலுள்ள தண்ணீரை கிரகித்து வளரும் தன்மை கொண்டது. அதன் பருவகாலத்தில் பூத்து, காய்த்து, வளர்ந்துவிடும். இதில் விஷேச அம்சம் கொண்டதுதான் வெள்ளெருக்கு.


www.aanmeegamalar.com

இதை வீட்டிலும் வளர்க்கலாம். இதன் பூவை வைத்து விநாயகருக்கும், சிவனுக்கும் அர்ச்சனை செய்யலாம்.

வெள்ளெருக்கம் பூ சங்கை பஸ்மமாக்கப் பயன்படுகிறது.வெள்ளெருக்கு பட்டையை நூலுக்குப் பதில் விளக்குத்திரியாக போட்டு வீட்டில் எரிக்க சகல துர்சக்திகளும் விலகி ஓடும்.வெள்ளெருக்கு வேரில் மணிமாலை செய்யலாம். விநாயகர் செய்து வழிபடலாம்.ஆகர்ஷணம் எட்டு வகைப்படும். இதில் தன ஆகர்ஷணம் பண வரவை அள்ளிக் கொடுக்கக் கூடியது இந்த வெள்ளெருக்கு விநாயகர்.

வெள்ளெருக்கு விநாயகர் என பல இடங்களில் விற்பனை செய்கிறார்கள். வேர்ப் பகுதிக்கு பதில் தண்டுப்பகுதியில் விநாயகர் செய்து விற்கிறார்கள். ஆனால் அது விரைவில் உளுத்துப்போய் உதிர்ந்துவிடுகிறது.

நம்பிக்கைக்குரிய சித்த வைத்தியர் மூலமாக வெள்ளெருக்கு செடியை அடையாளம் கண்டு, அதன் வேரை எடுத்து ஆசாரியை வைத்து வெள்ளெருக்கு விநாயகர் செய்து கொள்ளலாம்.

வெள்ளிக்கிழமை, ராகு காலத்தில், வெள்ளெருக்கு விநாயகருக்கு, அரைத்த மஞ்சள் கலவையைத் தடவவும்.

அதற்கு அடுத்த வெள்ளிக்கிழமை, ராகு காலத்தில் சந்தனம் அரைத்த கலவையை அதன்மேல் தடவி, நிழலில் காய வைத்தால் எருக்கன் விநாயகரில்




உள்ள கதிர்வீச்சுக்கள் கட்டுப்படுத்தப்பட்டு, நன்மையான கதிர்கள் நம் வீட்டில் பரவும்.

இவ்வாறு செய்தபின், அவரவர் இஷ்டம் போல வழிபாடு செய்யலாம்; தூப தீப நைவேத்தியம் செய்யலாம்; ஸ்ரீ சொர்ணகணபதி மந்திரம் சொல்லி, வெள்ளெருக்கு விநாயகரை வழிபட்டால், தன ஆகர்ஷணம் உண்டாகும்.

வெள்ளெருக்கு (வெள்ளை எருக்கு) வேரில் உருவான விநாயகரே மிகவும் சக்தி வாய்ந்தவர். பொதுவாக வெள்ளெருக்குச் செடிக்கு தனி சக்தி உண்டு. வெள்ளெருக்கு தேவ மூலிகை அல்லது விருட்சம் என்றும் கூறலாம். அரிதான பொருள் இருக்கும் இடத்தில்தான் வெள்ளெருக்கு செடி முளைக்கும் என சங்க கால நூல்களில் குறிப் பிடப்பட்டுள்ளது.

புதையல், ரத்தினங்கள், சிலைகள் பதுக்கி வைத்திருக்கும் இடம் போன்ற வற்றில் மட்டுமே வெள்ளெருக்கு முளைக்கும் என விருட்ச சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ளது. அதன்படி பார்த் தோமேயானால் வெள்ளெருக்கு இருக்கும் இடத்தில் தெய்வீக சக்தி இருக்கிறது என்று அர்த்தம்.

ஆனால், அதேவேளையில் அங்கு தீய சக்திகளும் எருக்கன் செடியை ஆக்கிரமிக்கவும் வாய்ப்பும் இருக்கிறது. "வெள்ளருக்கு பூக்குமே வேதாளம் பாயுமே" என்ற பாடலும் சங்க காலத்தில் பிரபலம்.

எனவே வெள்ளெருக்கு செடி எதற்கு அருகில் வளர்ந்துள்ளது என்றும் பார்க்க வேண்டும். தீய சக்தி உள்ள இடத்தில் இருக்கும் வெள்ளருக்கு செடியின் வேரைக் கொண்டு விநாயகரை உருவாக்கக் கூடாது.

எனவேதான் வெள்ளெருக்கு வேரை எடுக்கும் முன்பாக வேப்பிலை, கூழாங்கற்கள், மா இலை, வில்வ இலை ஆகியவற்றை மாலை போல் கோர்த்து அந்த வெள்ளெருக்கு செடியை சுற்றி காப்புக்கட்டி, ஒருவாரம் கழித்த பின்னரே வெள்ளெருக்கு வேரை எடுத்து அதனை பதப் படுத்தி விநாயகர் உருவம் செய்ய வேண்டும்.

வெள்ளெருக்கு செடிக்கு உயிர்ப்பு சக்தி உள்ளதால், அதனைக் பார்த்தவுடன் வெட்டி விடாமல் மேற்கூறிய பரிகார முறைகளை கடைப்பிடித்த பின் அதை வெட்டி அதன்மூலம் செய்யப்படும் விநாயகர் உருவத்திற்கு சிறப்பான பலன்கள் உண்டு.







மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# மனிதர்களை சோதிக்கும்

# பூத கணங்கள்




பூத கணங்கள் என கேள்விப்பட்டிருப்பீர்கள். பழமையான கோவில் கோபுரங்களில் நான்கு திசைகளிலும் வீற்றிருக்கும் இவை, சிவனுக்கு சேவை செய்ய பிறப்பிக்கப்பட்டவை. இவைகள் நம் வாழ்விலும் சில இன்ப துன்பங்களை ஏற்படுத்த வல்லவை. இதை பற்றி பழம்பெரும் கிரந்தங்களில் பல குறிப்புகள் உண்டு. தற்காலத்திலும் அவை பொருந்தும். இந்த முப்பது மூன்று பூத கணங்களும் நமக்கு எப்படிப்பட்ட சோதனைகளை தரும் என பார்ப்போம்.

| | |
|---|---|
| காம பூதம் | பெயரே விளக்கம் தரும். ஒருவரை காமத்தில் மோகம் கொண்டு அலைய செய்து வீணாக்கும். |
| ராட்சச பூதம் | மனிதனை ராட்சச குணம் கொள்ள செய்யும். |
| வேதாள பூதம் | அடுத்தவரை மதியதிருத்தல், தன்னை தானே அளித்து கொள்ளல். |

| | |
|---|---|
| கிரண பூதம் | மதுவுக்கு அடிமையாக்கும், துற சகவாசம் ஏற்படுத்தும். |
| ஷூஸ்மாண்ட பூதம் | நற் சகவாசம், ஆன்மீக பிரியம் ஏற்படுத்தும். |
| யக்ஷ பூதம் | தற்கொலைக்கு தூண்டும். |
| பைசாச பூதம் | தெய்வத்தை நிந்திக்க செய்யும் |
| சித்த பூதம் | ஞானமளிக்கும் |
| குரவ பூதம் | பிறருக்கு ஞானத்தை போதிக்க செய்யும். |
| கந்தர்வ பூதம் | அழகிய தேகத்தை தரும். |
| அசுர பூதம் | பிராமண துவேஷம், ஞானிகளை நிந்தித்தல், மாமிச பிரியம் கொள்ள செய்யும். |
| முனி பூதம் | சாஸ்திரத்தில் நாட்டம் கொள்ள செய்யும். |

| | |
|---|---|
| விருத்த பூதம் | உடல் கோணலை கொடுக்கும். |
| தேவ பூதம் | தேவர்கள், சித்தர்கள், மகான்கள், பெரியோர்களிடத்தில் நாட்டம் கொள்ள செய்யும். |
| வருண பூதம் | நீர் நிறைந்த பிரதேசத்தில் வாசம் கொள்ள செய்யும். |
| அர்த்தபிதா பூதம் | சோம்பலை கொடுக்கும். |
| ஈசுர பூதம் | சரித்திரத்தில் நாட்டம் கொள்ளச்செய்யும். |
| வித்தியுன்மாலி பூதம் | பயம் கொள்ள செய்யும். |
| நிகட பூதம் | பெண்கள் மீது நாட்டம். |
| மணிவரை பூதம் | எவற்றிற்கும் பயமில்லா தன்மையையும், அதீத கோபத்தையும் கொடுக்கும். |
| குபேர பூதம் | தன விருத்தி. |
| விருபாச பூதம் | தேகத்தில் வலிமையுண்டாக்கும். |
| சக பூதம் | பித்தம், சதா பயம். |
| சாகோர்த்த பூதம் | நிர்வாண நிலையில் தெருவெங்கும் ஓட்டம், ஞான நிலை. |
| யாகசேனா பூதம் | பெருமை, தற்புகழ்ச்சி. |
| நிஸ்ததேச | பெண்களை இம்சித்து புசித்தல், குரோத எண்ணம் கொண்டு வரும். |
| இந்திர பூதம் | குறையாத தனத்தை தரும். |




| | |
|---|---|
| நாக பூதம் | மயான வாசம், மலை வாசம். |
| விசாக பூதம் | எல்லோரையும் எப்பொழுதும் குறை கூறி கொண்டிருத்தல். |
| கசுமால பூதம் | அதீத தீனி எண்ணம். |
| அசாத்திய பூதம் | வலிய சென்று மற்றவரை சண்டைக்கு இழுத்தல். |
| பித்த பூதம் | மன சுழற்சி, பைத்திய நிலை. |
| ப்ரம்ம ராக்ஷச பூதம் | தேவர்கள், முனிகள், பிராமணர்களிடம் விரோதம். |

மேற்கண்டவற்றை நீங்கள் ஆழ்ந்து நோக்கினால் நம்மிடம், நாம் பார்க்கும், பலரிடம் மேற்கண்டவற்றை காணலாம். இவைகள் அனைத்தும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கணிக்கப்பட்டவை.

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# அற்புத பலன் தரும்

# 51 விநாயகரும் பலன்களும்

| | | |
|---|---|---|
| 1. | ஏகாக்ஷர கணபதி | பரிபூரண சித்தி. |
| 2. | மகா.கணபதி | கணபதி அருள் கிடைக்கும் |
| 3. | த்ரைலோக்ய. மோஹன கர கணபதி | ஸர்வ ரக்ஷாப்ரதம். |
| 4. | லக்ஷ்மி கணபதி | தன அபிவிருத்தி |
| 5. | ருணஹரள கணபதி | கடன் நிவர்த்தி. |
| 6. | மகா வித்யா கணபதி | தேவ அனுக்ரகம். |
| 7. | ஹரித்ரா கணபதி | உலக வசியம். |
| 8. | வக்ரதுண்ட கணபதி | அதிர்ஷ்ட லாபம். |
| 9. | நிதி கணபதி | நிதி ப்ராப்தி. |
| 10. | புஷ்ப கணபதி | தானிய விருத்தி. |
| 11. | பால கணபதி | மகிழ்ச்சி, மன நிறைவு. |
| 12. | சக்தி கணபதி | சர்வ காரியசித்தி. |
| 13. | சர்வ சக்தி கணபதி | சர்வ ரக்ஷாப்ரதம். |
| 14. | க்ஷிப்ர ப்ரஸாத கணபதி | துரித பலன். |
| 15. | குக்ஷி கணபதி | ரோக நிவர்த்தி. |
| 16. | ஸ்ரீ சந்தான லட்சுமி கணபதி | மக்கட்செல்வம். |
| 17. | ஸ்ரீ ஸ்வர்ண கணபதி | ஸ்வர்ண பிராப்தி. |
| 18. | ஹேரம்ப கணபதி | மனச்சாந்தி. |
| 19. | விஜய கணபதி | வெற்றி. |
| 20. | அர்க கணபதி | தோஷ நிவர்த்தி. |
| 21. | ச்லேதார்க்க கணபதி | மாலா மந்திரம். |
| 22. | உச்சிஷ்ட கணபதி | திரிகால தரிசனம். |
| 23. | போக கணபதி | சகலலோக ப்ராப்தி. |
| 24. | விரிவிரி கணபதி | விசால புத்தி. |
| 25. | வீரகணபதி | தைரியம். |



| | | |
|---|---|---|
| 26. | சங்கடஹர கணபதி | சங்கட நிவர்த்தி. |
| 27. | கணேசாங்க நிவாரணி | லட்சுமி மந்திர சித்தி. |
| 28. | விக்னராஜ கணபதி | ராஜயோகம். |
| 29. | குமார கணபதி | மாலா மந்திரம். |
| 30. | ராஜ கணபதி | மாலா மந்திரம். |
| 31. | ப்ரயோக கணபதி | மாலா மந்திரம். |
| 32. | தருண கணபதி | தியானயோக ப்ராப்தி. |
| 33. | துர்கா கணபதி | துக்க நிவாரணம். |
| 34. | யோக கணபதி | தியானம். |
| 35. | நிருத்த கணபதி | கலா பிவிருத்தி. |
| 36. | ஆபத்சகாய கணபதி | ஆபத்துகள் நீங்குதல். |
| 37. | புத்தி கணபதி | வித்யா ப்ராப்தி. |
| 38. | நவநீத கணபதி | மனோவசியம். |
| 39. | மோதக கணபதி | சம்பூர்ண பலன். |
| 40. | மேதா கணபதி | மேதா பிவிருத்தி. |
| 41. | மோஹன கணபதி | ரக்ஷாப்ரதம். |
| 42. | குரு கணபதி | குருவருள். |
| 43. | வாமன கணபதி | விஷ்ணு பக்தி. |
| 44. | சிவாவதார கணபதி | சிவபக்தி. |
| 45. | துர்வாக கணபதி | தாப நிவர்த்தி. |
| 46. | ரக்த கணபதி | வசிய விருத்தி. |
| 47. | அபிஷ்டவாத கணபதி | நினைத்ததை அடைதல். |
| 48. | ப்ரம்மண கணபதி | ப்ரம்ம ஞானம். |
| 50. | மகா கணபதி | ப்ரணவமூலம். |
| 51. | வித்யா கணபதி | ஸ்ரீ வித்தை |






# இந்திய புத்தகங்களில் படைப்பின் பெருமையும் இரகசியமுமே அதிகமாக வெளிப்படும்

வர்க்கம் என்பது இனத்தோடு சேர்ந்தது. குதிரை ஒரு வர்க்கம். யானை ஒரு வர்க்கம். இரண்டும் வேறு வேறு இனங்கள் என்பதனால் பரம்பரைகளையும் பழக்க வழக்கங்களையும் வர்க்கம் இனம் இவைகளை படைக்கின்றன. இதற்கு இனக்கொள்கை என்றும் வர்க்க நடை உடை பாவனைகள் என்றும் பெயர். இதனுடன் குரலும் மொழியும் ஒன்றாக சேருகின்றன. இதற்கே வர்க்க உணர்வு, இன உணர்வு என்று பெயர். உலக மக்களிடம் இது உண்டு. இந்த எண்ணங்கள் சில பல சமயங்களில் மனிதர்களிடம் வெளிப்படலாம். அப்பொழுது இன உணர்வு வர்க்க உணர்வுப் பிரச்சனைகளாக மாறிவிடுகிறது. உலகில் சில நாடுகளில் இப்பிரச்சினை தற்பொழுது இருக்கிறது. இந்த இனபேத வர்க்கபேத நினைவு மனித உடலின் உயிரின் பிறப்பு வழி தன்மையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இவ்வுணர்வைத் தொட்டால் அது கொழுந்து விட்டு எரிய நியாயங்கள் இருக் கின்றன. இதுவே இதன் கொள்கை ஆகும்.

❖❖❖

மேற்கூறியபடி எண்ணங்களும், வாதங்களும் செய்வது நல்லதா இல்லையா அல்லது கெடுதலா? ஒரு குறிப்பிட்ட அளவு வரை சில நெருக்கடியான சந்திப்புகளில் பிற மனிதர்களால் தோற்றுவிக்கப்படும் துன்பங்களும் அதன் எதிரொலிகளும் வேற்று இயல்புடைய மக்களை தாக்கி விடுகின்றன. அப்பொழுது இதனைப் போக்க இனஉணர்வு,



வர்க்க உணர்வு கொள்கைகளை செயல்படுத்தி போக்கிக் கொள்ளலாம். ஆனால் எல்லா வகைகளிலும் இத்தகைய கொள்கைகள் நல்லதே அல்ல. அது எந்த ஒரு நாட்டின் ஆரோக்கியத்திற்கும் சரி இல்லை. ஆனால் வேறு வழி இல்லை என்பது ஒரு கொள்கை ஆகும்.

❖❖❖

வர்க்க உணர்வு துன்பங்கள் எப்படித் தோன்றுகின்றன? உண்மையில் இது தோன்றுவதற்கு வழியே இல்லை. வர்க்க உணர்வு கொள்கை என்பதே கிடையாது. ஆயினும் உலகில் சிற்சில இடங்களில் தோன்றி கொண்டே இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம் பிறப்பைப் பற்றிய பிறப்பின் கௌரவம், தேகத்தின் கௌரவம், நிறம், மொழி இவைகளின் ஆணவம் இவைகளால் தோன்றுகின்றது. இதை எடுத்து விட்டால் வர்க்கபேதம் ஒழிந்து விடும்.

❖❖❖

மேற்சொன்னது இப்படியானால் ஆப்பிரிக்காவில் உள்ள நிறவெறிக்கொள்கை என்றால் என்ன? ஆப்பிரிக்க கண்டத்திலும் பல ஐரோப்பியர்களின் உள்ளத்திலும் இந்த நிறவெறிபேதம் இயற்கையாய் காண்பதற்கு மேற்சொன்ன வர்க்க இனஉணர்வே காரணம், ஆனால் ஆய்ந்து பார்க்கும்பொழுது இது ஒரு இனவர்க்க பேதக்கொள்கையே



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

அல்ல. அதற்கு பதிலாக இதற்கு வேறு பெயரிடலாம். என்ன பெயர் தெரியுமா? வெள்ளைநிற மனிதர்களுக்கும், கருப்புநிற மனிதர்களுக்கும் நிறவேற்றுமை கவர்ச்சி கொள்கை என்பதே நேரிடையாக உள்ளது. நிறபேதம் வேறு. முன்னே சொன்ன வர்க்கபேதம் வேறு. ஆப்பிரிக்காவில் நிறத்தை அடிப்படையாக கொண்டது இது. மற்றது பிறப்பின் ஆணவத்தை மையமாக கொண்டது. சிற்சில மனிதர்களின் மனதில் தோன்றும் ஆயாசமே அவர்களின் சிந்தனையிலும் நிறபேதத்திற்கு உண்டான வேர் தோன்றி ஆப்பிரிக்க நிறவெறி கொள்கை உண்டாகி விட்டது.

❖❖❖

நிறவெறிக்கொள்கையை பிரச்சாரத்தின் மூலமாக தள்ள முடியாது. ஒவ்வொரு தனித்தனி மனிதனையும் ஆணையும் பெண்ணையும் ஒருவருக்கு ஒருவர் சமமே என்ற புத்துயிர் கொள்கை தோன்றி அதுவே அனைவரின் மனதையும் மாற்ற வேண்டும். பிறகு நிறவெறிக்கொள்கையை நீக்குவது சுலபம். தயவு கூர்ந்து கவனி யுங்கள். நிறவெறிக்கொள்கை என்பது வேறு. இனமான கொள்கை என்பது வேறு. இரண்டும் தனித்தனி. இரண்டின் அடிப்படைகளும் வேறே.

❖❖❖

இனமான கொள்கையை ஒரு கொள்கையாகப் போன்று சொல்லப்படுகிறதே அதற்கு எது காரணம்? இவ்விடத்தில் அதற்கு காரணம் மக்களின் பேச்சு மொழியாகிய மொழியே. ஆயினும் பல மொழிகள் இருந்தால் இது ஏற்பட்டு விடும் என்பதற்கு வழி இல்லை. ஏன் என்றால் இந்தியாவில் பல மொழிகள் இருக்கின்றனவே. ஆயினும் இங்கு இக்கொள்கை தோன்றவில்லை பார்த்தீர்களா? உண்மையில் எந்த இடத்திலும் இனப்பிரச்சனைக்கு காரணம் மொழியே அல்ல. மொழிகளைப் பேசும் மனிதர்களின் மொழி ஆணவம் அல்லது மொழி கௌரவம் அவர்களின் உயிரின் மீது வைத்தால் நல்லது. அதற்கு பதில் அக்கருத்தை தேகத்தின் மீது வைத்து விடுவதால் இனப்பிரச்சனை பிறந்து விடுகிறது. உலகநாடுகளுக்கும் இந்த கதிதான்.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# அருணகிரிநாதர் உருவாக்கிய ஆலயம் சிதிலமடையும் அவலம்

அரும்பெருமை வாய்ந்த நம் முன்னோர்கள் சிவ வழிபாட்டையே தமது உயிர் மூச்சாகக் கொண்டிருந்தனர். அவர்கள் செய்த தொண்டிற்கு நிகராக தற்காலத்தில் நாம் செய்ய முடியாத போதிலும், புதிய ஆலயங்கள் கட்டுவதைவிடுத்து, பழமைவாய்ந்த சிவாலயங்களையும், வைஷ்ணவ ஆலயங்களையும் சீர் தூக்குவதே சாலச் சிறந்த தாகும்.

அவ்வாறான பழமைமிக்க சிவாலயங்களை சீர் செய்தால், நம் தலைமுறைகள் சிறக்கும் என்ப தோடு, நாமும் வாழ்த்தப்படுவோம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

அவ்வகையில் திருவண்ணாமலைமாவட்டம், ஆரணி வட்டத்தில், பழமைவாய்ந்த முள்ளண் டிரம் என்னும் ஊரில் அமைந்துள்ள ஸ்ரீ தான்தோன்றீஸ் வரர் ஆலயம் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஊருக்கு ஓர் முக்கிய சிறப்பு உண்டு. அது யாதெனில், திருவண்ணாமலையில் முருகப் பெருமானால் தடுத்தாட்க்கொள்ளப்பட்டு, திருப் புகழ் ஆசிரியராய் விளங்கிய அருணகிரிநாதர் பிறந்தது இந்த ஊரில்தான்.

சென்னை அரசு கையெழுத்துப்பிரதி நிலை யத்தில் அருணகிரிநாதர் குறித்த குறிப்பு உள்ளது. சுமார் 100 சுலோகங்களைக் கொண்ட "விபாகரத்த மாளிகை" என்னும் வடமொழி நூலில் அருணகிரிநாதர் முள்ளண்டிரத்து டிண்டிமக் கவிகளுல் ஒருவரெனக் கூறுகிறது. அதோடு, இவர் வாழ்ந்த காலம் 1400 1490 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இவ்வூருக்கு அருகில் "சோமநாதன் மடம்" என்று அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற "12 புத்தூர்" தலம் உள் ளது மேலும் ஓர் சான்றாக உள்ளது.

கங்கைக் கரையில் வாழ்ந்த எட்டு கோத் திரத்தைச் சேர்ந்த அந்தணர்கள், கங்கையில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக தென்னாடு வர... அவர்களை சோழர்கள் வரவேற்றனர். அவர்களுக்கு மெத்தப்பாடி, முள்ளண்டிரம், அத்தியூர் ஆகிய மூன்று அக்ரஹாரங்களை நிறுவி, அதை அவர்களுக்கு சர்வ மானியமாக [இனாமாக] அளித்தனர். அதில் ஆதியில் முல்லைவனமாகத் திகழ்ந்த முள்ளண்டிரத்தில்






கௌதம கோத்திரத்தின் வழிவந்த இராஜநாதகவி அபிராமிநாயகி தம்பதி களுக்கு மகனாகப் பிறந்தவரே சோணதரர். அவரே பின்னாளில் அருணகிரிநாதர் என அழைக்கப்பட்டார்.

இவர் இவ்வூரில் அன்னம், தண்ணீர்,தூக்க மின்றி ஈசனிடம் மனம் லயித்தபடி தவம் கிடந்தார். இறைவன் தோன்றி, தமது வாயிலிருந்து தாம் பூலத்தை சோணதரர் வாயிலிட்டு மறைந்தார்.

அடுத்தகணமே அனைத்து கலைகளும் அத்து படியானது அருணகிரிநாதருக்கு...! வடதிசை நோக்கி யாத்திரை சென்றார். தில்லியை ஆண்ட முகலாய மன்னன் இவரது கவித்திறமையைக் கண்டு மெச்சி, பல பரிசுகளைத் தந்ததோடு, "விந்திய டிண்டிமக்கவி" என்கிற பட்டத்தையும் வழங்கி கௌரவப்படுத்தினான்.

ஊர் திரும்பினார் சோணதரர். மன்னன் பிரபுடதேவராயன் இவருக்கு அளித்த நிலத்தை பண்படுத்தி உழும் வேளையில் ஏர்க்கலப்பையில் வெட்டுப்பட்டு, சுயம்பு லிங்கம் வெளிப்பட்டது. வெட்டுப்பட்டதன் காரணமாக வருந்தினாலும், ஈசன் தனது ஊரில் வெளியானதை நினைத்து, அவரை வணங்கி, வழிபட்டு மகிழ்ந்தார். இச் செய்தியை மன்னர்களிடம் தெரிவித்து, ஆலயம் எழுப்பி ஆனந்தம் அடைந்தார். இன்றும் இப்பதி சிவலிங்கத்தின் சிரசில் ஏர் கலப்பையால் உடைந்த பகுதி பளிச்சென தெரிகிறது. அதோடு, தனது இஷ்ட தெய்வமான அருணாச்சலேஸ்வரர் அபீதகுஜாம்பிகைக்கும் மன்னரின் துணையால் ஆலயம் எழுப்பி வழிபட்டுள்ளார் அருணகிரி வள்ளல். பின்னர் விதிவசத்தால் விலைமாதர்களை நாடி, அண்ணாமலையில் ஆறுமுகப்பெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டார்.

திருப்புகழ் மட்டுமின்றி, இவர் அருளிய

• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்






பல அரிய நூல்களும் உண்டு. அவை... அருணாசலேஸ்வரர் கும்மி, பழங்கால நாட்டுப் பாடல்கள், சோமவல்லி யோகானந்த பிரஹசனம், கோதவர்ம யோக பூஷணம் ஆகியனவாகும்.

மகான் ஸ்ரீ அருணகிரிநாதரால் உருவான இவ்வாலயம் இன்று மண் சரிந்து, கட்டிடத்தின் கற்கள் தகர்ந்து, சிதைந்து கிடக்கிறது. இவ்வாலயத்தின் முக மண்டபத் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றும் காணக்கிடைக்காத பொக்கிஷங்களாக திகழ்கின்றன. கோயில் எதிரே அமைந்துள்ள திருக்குளம் மண்மூடி மறைத்துள்ளது.

அருணகிரிநாதரால் வெளிப்பட்டு, அரசர் காலத்தில் கோலோச்சிய இச்சிவாலயத்தை மீட்டு, திருப்பணிகளை முடித்து, குடமுழுக்கு நடத்திட, போதிய நிதியும், பொருளும், ஒத்துழைப்பும் தேவைப் படுகிறது.


மோ.கணேஷ்

புரவலர்கள்தங்கள் மேலான கைங்கரியத்தை இவ்வாலயத்திற்கு செய்து இவ்வீசன் ஆலயத்தை புத்தொளி வீசச் செய்திட வேண்டுமாய் அன்புடன் வேண்டுகின்றோம்.




திருப்பணி தொடர்புக்கு:

திருப்பணிக்குழு, ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய அறக்கட்டளை, முள்ளண்டிரம் 632 512. (வழி) திமிரி, ஆரணி தாலுகா. திருவண்ணாமலை மாவட்டம். தமிழ்நாடு.

– ஜோதிட கலாநிதி
பழங்காமூர் மோ.கணேஷ்குருக்கள்,
ஆரணி. தொடர்புக்கு 9789156179





# விநாயகரும் 100 தகவல்களும்




1. விநாயகர் ஒரு கொம்பு, இரு காதுகள், மூன்று கண்கள், நான்கு தோள்கள், ஐந்து கைகள் ஆறெழுத்துக்கள் உடையவர்.
2. விநாயகர் பூதமாய், தேவராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், உயர்திணையாய், அக்திணையாய் எல்லாமாய் விளங்குகிறார்.
3. யானையை அடக்கும் கருவிகள் பாசமும் அங்குச மும், விநாயகர் தன் கையில் பாசாங்குசத்தை ஏந்தி இருக்கின்றார். தன்னை அடக்குவார் ஒருவரும் இலர் என்ற குறிப்பை இதன் மூலம் உணர்த்துகிறார்.
4. அகில உலகங்களும் விநாயகருடைய மணி வயிற்றில் அடங்கிக் கிடப்ப என்ற குறிப்பை அவருடைய மத்தள வயிறு புலப் படுத்துகின்றது.
5. விநாயகர் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞான சக்தி என்ற மும்மதங்களைப் பொழிகின்றார்.
6. கும்பம் ஏந்திய கை படைக்கும் தொழிலை யும், மோதகம் ஏந்தியகை காத்தல் தொழி லையும், அங்குசம் ஏந்திய கரம் அழித்தல் தொழிலையும், பாசம் ஏந்திய கரம் மறைத் தல் தொழிலையும், தந்தம் ஏந்திய கரம் அருளல் தொழிலையும் புரிகின்றன. எனவே விநாயகர், சிருஷ்டி, திதி, சங்காரம், திரௌ பவம், அனுக்கிரகம் என்ற ஐம்பெருந் தொழில்களை ஐந்து கரங்களால் புரிந்து ஆன்மாக்களுக்கும் அருள் புரிகின்றார்.
7. விநாயகர் தாய் தந்தையரை அன்புடன் வழி பட்டதால் பிள்ளை என்ற பெயருடன் ஆர் என்ற பன்மை விகுதி பெற்றுப் பிள்ளையார் என்று பேர் பெற்றார்.
8. முருகர், அம்பிக்கை ராமர், கிருஷ்ணர் முதலிய உருவங்கள் சிற்ப முறைப்படி செய்து வழிபட வேண்டியவை. அவை சிற்ப லட்சணத்திற்கு மாறுபட்டிருந்தால் வழிபாடு செய்பவருக்கு நன்மை கிடைக்காது. ஆனால் பிள்ளையார் உருவம் அப்படி அல்ல. மஞ்சளை அரைத்து ஒரு சிறு குழந்தை கூட பிடித்து வைத்தால் போதும் பிள்ளையார் தயார். பிள்ளையார் அவ் வடிவில் எழுந் தருளி அருள்புரிவார்.
9. சந்தனம், களி மண், மஞ்சள், சாணம் இப்படி எளிதாகக் கிடைக்க கூடிய பொருளில் விநாய கரை செய்து வழிபடுவார்கள்.
10. விநாயகருக்கு எளிதாக கிடைக்கக் கூடிய அருகம்புல் மிக விருப்பம். அருகு வைத்து விநாயகரை வழிபட்டால் பிறவிப் பிணி நீங்கி, இன்பம் பெருகும்.
11. விநாயகருக்கு கரும்பு, அவரை, பழங்கள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு, அப்பம், பச்சரிசி, பிட்டு, வெள்ளரிப்பழம், கிழங்கு, அன்னம், கடலை முதலியன வைத்து நிவேதனம் செய்ய வேண்டும்.
12. விநாயக சதுர்த்தி அன்று நாம் பூஜை செய்யும் விநாயகர் சிலை மண்ணினால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். நம் கட்டை விரல் அளவைப் போல பன்னிரண்டு மடங்கு அளவில் இருக்க வேண்டும்.
13. புரட்டாசி மாத சதுர்த்தி வரை நம் இல்லத்துப் பூஜையில் இருக்க வேண்டும். இந்த 30 நாட்கள் தினந்தோறும் பூஜைகளை முறையாகச்

செய்து வருவதுடன் நைவேத்தியங்களும் செய்ய வேண்டும். புரட்டாசி சதுர்த்திக்கு மறுநாள் பூஜை முடிந்து சிலையை நதியிலோ, குளத்திலோ, கடலிலோ அல்லது ஏதாவது நீர்நிலைகளிலோ சேர்த்து விட வேண்டும்.

14. பார்வதி தேவியே கடைப்பிடித்து வழிகாட்டிய விரதம் இது. இந்த சதுர்த்தி பூஜையைச் செய்து தான் பார்வதி தேவி ஈசுவரனைக் கணவராக அடைந்தார்.

15. ராஜா கர்த்தமன், நளன், சந்திராங்கதன், முருகன், மன்மதன் (உருவம்பெற்றான்), ஆதிசேஷன், தட்சன் மற்றும் பலர் விநாயக சதுர்த்தி விரதத்தைக் கடைப்பித்து உயர்ந்த நிலை அடைந்தனர்.

16. விநாயகர் பக்தர்களில் தலைசிறந்தவர் புருசுண்டி முனிவர். விநாயகரை நோக்கித் தவமிருந்து விநாயகரை நேரே தரிசனம் செய்தவர்.

17. தேவேந்திரனுடைய விமானம் சங்கடஹர சதுர்த்தி விரதப் பலனா லேயே மீண்டும் விண் ணில் பறக்க ஆரம்பித்தது.

18. கிருத வீர்யன் இந்த விரதத்தின் பலனால் உத்தமமான குழந்தைச் செல்வமடைந்தான்.

19. சூரசேனன் என்னும் மன்னன் விநாயகர் விரதத்தைத் தான் கடைப்பிடித்ததோடு தன் நாட்டு மக்கள் அனை வரும் இதைக் கடைப்பிடிக்கும்படி செய்து சகல செல்வங் களையும் பெற்றான்.

20. திண்டிவனம் திருவண்ணாமலை தேசிய நெடுஞ்சாலையில் 12 கி.மீ. மேற்கே அமைந்துள்ள கிராமம் தீவனூர். அந்த கிராமத்தில் உள்ள பொய்யாமொழிப் பிள் ளையார் கோவிலில் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு முதல் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும் என்பது அங்குள்ள வர்களின் நம்பிக்கை.

21. சாணம், புற்றுமண், மஞ்சள், வெல்லம், எருக்கம் வேர், சந்தனம் ஆகியவற்றில் பிள்ளையார் உருவம் செய்து வழிபட்டால் அனைத்துவிதமான நலன்களும் பெற்று மோட்சம் அடைவர் என்று விநாயக புராணம் கூறுகின்றது.

22. தும்பைப்பூ, செம்பருத்தி மலர், சங்கு புஷ்பம், எருக்கம்பூ, மா விலை, அருகம்புல், வில்வ இலை ஆகியவை விநாயகரை அர்ச்சனை செய்யவும் மாலையாக அணிவிக்கவும் மிகவும் உகந்தவையாக கருதப்படுகிறது.

23. கிருதயுகத்தில் தேஜஸ்வி என்ற பெயரில் சிம்மவாகனத்திலும் த்ரேதா யுகத்தில் மயில் வாகனத்திலும், துவாபர யுகத்தில் மூஞ்சுறு வாகனத்திலும் கலியுகத்தில் எலி வாகனத்திலும் விநாயகர் தோன்றியுள்ளார்.

24. வாஞ்ச கல்ப கணபதி தியானம் மூலமந் திரத்தை சிரமப்பட்டு மனதில் ஏற்றிக் கொண்டு முறைப்படி ஜபித்து வந்தால் உங்கள் வாழ்வில் பொருள் சேர்க்கை, பெரியோர் நட்பு, செல்வ நிலை உயர்வு கிட்டுவது உறுதி. குரு உபதேசம் பெற்று படித்தால் கூடுதல் பலன்கள் கிடைக்கும்.

25. ஈஸ்வரனுக்கும் உமையம்மைக்கும் இடையே ஸ்கந்த வடிவம் இருப்பின் அந்த வடிவத்தை ‘‘சோமாஸ்கந்த வடிவம்’’ என்றும் இடையில் விநாயகர் வடிவம் இருந்தால் இது கஜமுக அனுக்ரஹ வடிவம் எனவும் புராணங்கள் தெரிவிக்கின்றன.

26. வட இந்தியாவில் விநாயகர் தன்னுடைய திருக்கரங்களில் முள்ளங்கியை வைத்து உண்கிறார். தென் இந்தியாவில் தன் கரங்களில் மோதகத்தை வைத்துக் கொண்டு ருசி பார்க்கிறார்.

27. திருஷ்டிகளை விரட்டுகிற விநாயகர் யந்திரத்தை செப்புத் தகட்டில் வரைந்து விநாயாக சதுர்த்தி அன்று பூஜை செய்து, பிரதி சதுர்த்தி அன்றும் வழிபட்டு வர கண் திருஷ்டி நெருங்காது, வீட்டு வாசலில் சட்ட மிட்டு மாட்டலாம்.

28. கணபதி மந்திரங்களை பிரம்ம முகூர்த்த வேளை என்படும் அதிகாலை 4.30 முதல் 6.00க்குள் உச்சரிப்பது மிகவும் நல்லது என கணேச உத்தர தாயினி உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

29. விநாயகரை தேய்பிறை சதுர்த்திதோறும் வழிபடுவது சங்கடகர சதுர்த்தி என்று வழங்கப்படும். அதுவும் அந்நாளில் வன்னிமரத்தடியில் வழிபடுவது மிக நன்று.

30. பிள்ளையார் 15 பெண்களை திருமணம் செய்து கொண்டதாக புராணம் சொல்கிறது. வடக்கு இந்திய புராணங்களில் இக்குறிப்பு காணப்படுகிறது. அந்த 15 தர்மபத்தினிகள் சித்தி, புத்தி, வல்லமை, மோதை, பிரமோதை, சுமகை, சுந்தரி, மனோரனம், மங்கலை, கேசினி, சாந்தை, சாருகாசை, சுமத்திரை, நந்தினி, காமதை.

31. ஜப்பான் நாட்டில் வயது முதிர்ந்த ஆணும்




பெண்ணும் ஆரத்தழுவிக் கொண்டிருப்பதை போல உருவம் கொண்ட விநாயகர் சிலைகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இந்த இரு விநாயகர்களையும் வழிபட்டால் நீண்ட காலங்கள் வாழலாம் என்று நம்புகின்றனர்.

32. ஒவ்வொரு சதுர்த்தியன்றும் விநாயகர் கோவிலுக்கு சென்று எட்டுக் கொழுக்கட்டை செய்து தானமளித்தால் வறுமைகள் நீங்கி வளம் பெருகும்.

33. சாத்தூர் அருகே உள்ள போத்திரெட்டிபட்டி கிராமத்தில் உள்ள கட்ட விநாயகர் கோவிலில் தீப்பெட்டி செய்வோர் ஒவ் வொருவரும் தினம் ஒரு தீக்குச்சி வீதம் கொளுத்தி வழிபாடு செய் வார்கள். எரித்த குச்சியை வீட்டில் சேமித்து வைப்பார்கள். விபத்து நேராமல் இவ்விநாயகர் துணை செய்வார் என்பது நம்பிக்கை. நன்னிலத்திற்கு அருகேயுள்ள திருப்பனையூர் என்ற சிவதலத்தில் எழுந்தருளியுள்ள இந்தக் கணபதியை வழிபட்டால் நீங்கள் இறங்கும் பெருஞ் செயலில் உங்களுக்குத் துணையாக இந்தக் கணபதி விளங்குவார்.

34. முதன் முதலாக விநாயகருக்கு கொழுக்கட்டை படைத்து வழிபட்டவர் யார் என்று தெரியுமா? வசிஷ்டரின் மனைவியான அருந்ததி.

35. சுவாமிமலையில் கொங்கு நாட்டு பிறவிக் குருடனுக்கு கண்பார்வை வழங்கி அருள் புரிந்த கண் கொடுத்த விநாயகர் உள்ளார். கண்களில் ஏற்படும் நோய்கள் நீங்க இவரை வழிபடலாம்.

36. வன்னி மரத்தடியில் இருக்கும் விநாயகரை மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திர நாட்களில் வழிபாடு செய்து அன்றைய தினம் ஒன்பது கன்னிப் பெண்களுக்கு அன்னதானம், வஸ்திர தானம் அளித்து வந்தால் மாங்கல்ய தோஷம் அகலும், திருமணத்தடையும் நீங்கும்.

37. நடனமிடும் தோற்றத்தில் உள்ள நர்த்தன விநாயகருக்கு அபிஷேகம் செய்வித்து இனிப்பு நைவேத்யம் வைத்து வழிபட்டு வந்தால் இழந்தவற்றைப் பெறலாம்.

38. அஸ்வினி அல்லது மூலம் நட்சத்திரத்தில் சிவசக்தி விநாயகர் உள்ள ஆலயத்துக்குச் சென்று அலங்காரம் செய்விப்பதுடன் வெள்ளை, நீலம், சிவப்பு மூன்று நிறங்களும் கலந்த வஸ்திரத்தை விநாயகருக்கு அணிவித்து மூன்று வித நைவேத்யங்களாக இனிப்பு, உறைப்பு மற்றும் மோதகத்தை அர்ப்பணித்து வழிபட்டு வந்தால் உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம் வந்து சேரும்.

39. கேது திசை நடக்கையில் அதற்குரிய ஏழு ஆண்டுகளிலும் ஆன்மீக நாட்டம் அதிகரிக்குமாம். அச்சமயங்களில் கேதுவுக்கு உரிய தெய்வமாக விளங்கும் விநாயகப் பெருமானை வழிபட்டு வந்தால் துன்பங்களில் துவளாமல் இன்பமாக அதைக் கடக்கலாம். கேது ஒருவருடைய சுய ஜாதகத்தில் எந்த வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து அந்த திசை நோக்கி இருக்கும் விநாயகரைத் தேர்ந்தெடுத்து வழிபட்டால் இன்னும் சிறப்பான பலன்களைப் பெறலாம்.

40. குழந்தைப் பேறுக்குத் தயாராக இருப்பவர்கள் வல்லபை கணபதிக்கு நைவேத்தியங்கள் படைத்து நல்ல குழந்தையைத் தர வேண்டும் என்று வழிபட்டால் அதன்படி நடக்குமாம். சுவாமி மலையில் முருகன் சந்நிதானத்தில் வல்லபை கணபதியைக் காணலாம்.

41. திருவள்ளூர் மாவட்டம் திருப்பாச்சூரில் உள்ள சிவன் கோவிலில் 'விநாயகர் சபை'

உள்ளது. இத்தகைய சபை தமிழ்நாட்டில் எந்த ஒரு ஆலயத்திலும் இல்லை.

42. நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி அருகே கன்னடியன் கால்வாய் ஓரத்தில் மிளகு பிள்ளையார் உள்ளார். இவர் மீது மிளகை அரைத்து பூசி வழிபட்டால் மழை கொட்டோ கொட்டு என்று கொட்டுமாம்.

43. ஒன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளைப் பெற்றவர்கள் அவர்களுக்குள் சண்டைகள் வராமல் இருக்க விநாயகரை வேண்டிக் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

44. இலையினால் விநாயகரை அர்ச்சனை செய்தாலோ, அல்லது வன்னி விநாயகரை சுற்றி வந்து வழிபட்டாலோ தீவினைகள் விலகும் என்பது ஐதீகம்.

45. வில்வம், வேம்பு, அரசு, மந்தாரை, அத்தி, அரை நெல்லி, நாவல், வாகை ஆகிய ஒன்பது விருட்சகங்களுடன் விநாயகர் காட்சி தருவது அபூர்வம், பொதுவாக மேற்குரிய மரங்கள் எல்லாம் மருத்துவக்குணம் வாய்ந்தவை. புத்திரப் பேறுக்காக இம்மரங்களை சுற்றி வந்து வணங்குவது நல்லது.

46. பிள்ளையார், சூரியன், அம்பிகை, விஷ்ணு, சிவன் என்று ஐம்பெரும் தெய்வங்களையும் ஒரே நேரத்தில் ஒரே பீடத்தில் வைத்து பூஜை செய்வதற்கு கணபதி பஞ்சாயதனம் என்பர். இதில் விநாயகப்பெருமானை ஐந்து மூர்த் திகளில் நடுவில் வைத்து வழிபட வேண்டும்.

47. தேரெழுந்தூரில் உள்ள விநாயகர் திருஞான சம்பந்தருக்கு சிவாலயத்தின் வழி காட்டியதால் இப்பெயரோடு விளக்குகின்றார்.

48. வெள்ளை எருக்கம் வேரால் விநாயகரை பத்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் செய்து அவருடைய மூல மந்திரத்தால் வழிபட்டு வந்தால் சகல பலனும் கிடைக்கும் என்று ஸ்ரீ பவிஷ்ய புராணம் கூறுகிறது.

49. அடியார்களின் தரித்திரத்தை நீக்கி ஆயு ளையும், செல்வத்தையும், உடற்சுகத்தையும் அருள்பவர் ரண மோட்சக்கணபதி ஆவார்.

50. ‘வி’என்றால் இதற்கு மேல் இல்லை எனப் பொருள். நாயகர் என்றால் தலைவர் எனப் பொருள். இவருக்கு மேல் பெரியவர் யாரு மில்லை என்று பொருள்பட விநாயகர் என்று பெயரிடப்பட்டது.

51. கணபதி எனும் சொல்லில் ‘க’ என்பது ஞானத் தை குறிக்கிறது. ‘ண’ என்பது ஜீவர்களின் மோட்சத்தை குறிக்கிறது. ‘பதி’ என்னும் பதம் தலைவன் எனப்பொருள்படுகிறது.

52. விநாயகருக்கு விநாயகி, வைநாயகி, வின் கேஸ்வரி, கணேசினி, கணேஸ்வரி ஐங்கினி எனும் பெண்பால் சிறப்பு பெயர்களும் உண்டு. இந்து மதத்தில் மட்டுமல்ல, பௌத்த, சமண சமயத்தவர்களாலும் சிறப்பாக வழிபடும் சிறப்பும் இவருக்குண்டு.

53. விநாயகர் வழிபாடு இந்தியாவில் மட்டுமல் லாது இலங்கை, பர்மா, கயா, ஜாவா, பாலி, இந்தோனேசியா, சீனா, நேபாளம், திபெத், துருக்கி, மெக்சிகோ, பெரு, எகிப்து, கிரேக் கம், இத்தாலி என பல நாடுகளிலும் பல நூற்றாண்டுகளாக பரவி உள்ளது.

54. சென்னை அடையாறில் உள்ள மத்திய கை லாசம் என்னும் கோவிலில் ஆதியந்த பிரபு விநாயகர் அமர்ந்திருக்கிறார். இவருடைய சிறப்பு ஒரு பாதி கணபதியும், மறுபாதி மாருதியும் இணைந்த ஒரு புதுமையான அமைப்பாகும். இவருக்கு நாமே ஆரத்தி எடுக்கலாம். நம் கையாலேயே இந்த கடவு ளுக்கு பூஜை செய்யலாம் என்பதும் சிறப்பு.

55. விநாயகர் சதுர்த்தி சமயங்களில் மும்பையில் சுமார் 2 லட்சம் விநாயகர் சிலைகள் வரை வைத்து வழிபடும் மிகப்பெரிய விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

56. தெருவுக்கு தெரு விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளதால் மும்பையில் பூசாரி களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பல இடங்களில் பெண்கள் பூசாரிகளாக நியமிக்கப்படுகின்றனர்.

57. விநாயகர் சதுர்த்தி விழாவை கண்காணிப் பதற்காகவே மும்பையில் 4 ஆயிரம் இடங்களில் ரகசிய கண்காணிப்பு காமிராக் கள் பொருத்துவார்கள்.

58. விநாயகப் பெருமான் பெண் வடிவத்தில் சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலயப் பெருமாள் கோவிலில் காட்சி தருகிறார். இவருக்கு புடவைதான் அணிவிக்கப்படுகிறது. கணே சாயினி என அருள்பாலிக்கிறார்.

59. திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையார் உள்ளார். இவருக்கு பருத்த தொந்தியில்லை. இவர் ஒரு வலம்புரி விநாயகர். கல்லில் தோன்றிய சுயம்பு விநாயகர் ஆவார். சிற்பியின் உளியால் பொள்ளாத (செதுக்காத) பிள்ளையார் இவர். பொள்ளாத பிள்ளையார் பிற்காலத்தில் பொல்லாப் பிள்ளையார் என மாறி விட்டார்.

60. தும்பிக்கை இல்லாத பிள்ளையாரை நன்னிலம் பூந்தோட்டம் அருகே உள்ள இதலைப் பதியில் காணலாம். இங்கு இவர் வலது காலைத் தொங்க விட்டு இடது காலை மடித்து இடது கையை இடது கால் மீது வைத்து வலது கையைச் சற்றுச் சாய்த்து அபய கரமாக விளங்குகிறார்.

61. விநாயகப் பெருமான் வீணை வாசிக்கும் காட்சியை நாம் பவானியில் காணலாம்.

62. மும்பையில் உள்ள மோர்காம் மயூரேசுவரர் கோவிலில் நந்தி தேவரே விநாயகருக்கு வாகனமாக இருக்கிறார்.

63. விநாயகர் புல்லாங்குழல் வாசிக்கும் காட்சியை ஸ்ரீசைலத்தில் காணலாம்.

64. தேவகோட்டையில் உள்ள விநாயகர் காலில் சிலம்புடன் காட்சி தருகிறார். இவருக்கு சிலம்பணி விநாயகர் என்ற பெயர்.

65. கையில் பாம்பைப் பிடித்தபடி விநாயகப் பெருமான் சங்கரன் கோவிலில் காட்சி தருகிறார்.

66. ஆசியாவிலேயே மிகப்பெரிய விநாயகர் கோயமுத்தூரில் புலியகுளம் பகுதியில் இருக்கிறார். முந்தி விநாயகர் என்ற திருநாமத்துடன் இவர் அருள் தருகிறார். 190 டன் எடையுள்ள இவர் ஒரே கல்லால் உருவானவர். உயரம் 19.10 அடி, நீளம் 11 அடி அகலம் 10 அடி, ஏணிப்படி மூலம்தான் இவருக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது.

67. வேலூரில் சேண்பாக்கத்தில் 11 சுயம்பு விநாயகர்கள் எழுந்தருளியுள்ளார்கள். இவர்கள் தோன்றிய வடிவம் ஓம்கார வடிவத்தில் உள்ளது.

68. புதுவை அண்ணாசாலையில் புற்று மண்ணில் சுயம்புவாக தோன்றிய இந்த பிள்ளையார் பெயர் அக்கா சுவாமிகள் பிள்ளையார்.

69. திருப்பரங்குன்றம் குடவரைக் கோவிலில் விநாயகர் கையில் கரும்புடன் காட்சி தருகிறார்.

70. நரமுக விநாயகருக்கு திருக்கோவில் தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் மட்டும்தான் இருக்கிறது. அவை சிதம்பரம் (தெற்கு வீதியிலும்)திருசெங்காட்டுக்குடியும் ஆகும். நரமுகம் என்பது மனித முகத்தைக் குறிக்கும்.

71. ஊத்துக்குளி அருகே உள்ள அமணேசுவரர் கோவிலில் உள்ள பிள்ளையார் தன்னுடைய வாகனமான பெருச்சாளி மீது நான்கு கைகளுடன் நடனமாடுகிறார்.

72. ஆந்திர மாநிலம் ரேணிகுண்டாவில் ஒரே பீடத்தில் ஐந்து விநாயகர் சேர்ந்து காட்சி தருகிறார்கள்.

73. மயில் மீது விநாயகர் அமர்ந்திருக்கும் காட்சியை நாம் மகாராஷ்டிராவில் உள்ள மோர்காம் என்னும் ஊரில் காணலாம். இங்கு இவருடைய திருநாமம் மயூரேசர்.

74. யானை முகமும் புலிக்கால்களும் பெண்ணின் மார்பும் உடைய விநாயகர் வியாக்ரபாத விநாயகர் என அழைக்கப்படுவார். இவர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள நவக்கிரக மண்டபத் தூணிலும், நாகர்கோவில் அழகம்மன் கோவிலில் உள்ள தூணிலும் காட்சி தருகிறார்.

75. தஞ்சாவூர் சக்கரபாணி கோவிலில் விநாயகர் சங்கு சக்கரத்துடன் காட்சி தருகிறார்.

76. கும்பகோணம் ஸ்ரீநாகேஸ்வரசுவாமி கோவிலில் ஜீரஹர விநாயகர் என்ற திருநாமத்துடன் கணபதி கையில் குடையுடனும் தும்பிக்கையில் அமிர்த கலசத்துடனும் காட்சி தருகிறார்.

77. விநாயகர் தும்பிக்கை ஆழ்வார் என்ற திருநாமத்துடன் பெருமாள் கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார்.

78. கண் பார்வை கோளாறு உடையவர்கள், சுவாமி மலை முருகன் கோயிலில் உள்ள 'நேத்ர கணபதி' எனப்படும் கண்கொடுக்கும் கணபதியை வணங்குகிறார்கள்.

79. அரை அடி உயர விநாயகரை மருதமலை முருகன் கோயில் அடிவாரத்தில் தரிசிக்கலாம். இவர் சுயம்புவாகத் தோன்றியதால் 'தான்தோன்றி விநாயகர்' எனப்படுகிறார்.

80. சீனா, ஜப்பான், தாய்லாந்து, கம்போடியா, மியான்மர், மங்கோலியா, திபெத் ஆகிய நாடுகளிலுள்ள பௌத்த மக்களும் தங்கள் வணக்கத்தில் பிள்ளையாரையும் சேர்த்துக் கொண்டுள்ளனர். சீனாவில் காணப்படும் பல விநாயகர் சிலைகள் 1400 வருடங்கள் பழமை வாய்ந்தவை என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

81. திண்டிவனம் நெடுஞ்சாலையில் படாளம் கூட் ரோட்டில் அம்ருதபுரி என்ற ஊரில் 8 அடி உயரத்தில் பிரமாண்ட நவக்கிரக விநாயகர் உள்ளார். இவரை வழிபட்டால் அனைத்து கிரக தோஷங்களும் விலகும்.

82. ஈச்சனரி விநாயகருக்கு தினமும் நட்சத்திர அடிப்படையில் அலங்காரம் செய்யப்படுகிறது.

83. திருவாரூரில் ஆயிரம் ஆண்டு கள் பழமை




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

# இணையதளத்தை பார்க்கவும்









வாய்ந்த சர்க்கரை பிள்ளையார் உள்ளார். திருமண தடை உள்ளவர்கள் இங்கு 108 தீபம் ஏற்றி வழிபடுவது பரிகாரமாக உள்ளது.

84. தஞ்சை மாவட்டம் திருப்பனந்தூரில் இருந்து சீர்காழி செல்லும் வழியில் பந்தநல்லூரில் இருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ள மரத்துறை கிராமத்தில் இரட்டை விநாயகர் உள்ளார். இந்த இரட்டை விநாயகரை வணங்கினால் விவசாயம் செழிக்கும் என்று விவசாயிகள் நம்புகிறார்கள்.

85. நமது மூலா தாரத்தில் உறங்கும் குண்டலினி சக்தியை விழிப்படைய செய்யும் ஆற்றல் விநாயகர் வழிபாட்டுக்கு உண்டு.

86. பிள்ளையார் பட்டியில் உள்ள விநாயகர் தன் ஒரு கரத்தில் சிவ லிங்கத்தை ஏந்தி இருப்பதை சிறப்பானதாக சொல்கிறார்கள்.

87. திருச்சி உச்சிப்பிள்ளையார் கோவில் மலை யை தூரத்தில் கிழக்கு திசையில் இருந்து பார்த்தால் விநாயகர் சிலை போலவே தெரியும்.

88. விருத்தாசலம் பழமலைநாதர் கோவிலில் பூமிக்கு அடியில் உள்ள விநாயகர் சிலை 18 அடி ஆழத்தில் அமைந்துள்ளார்.

89. சேலம் மாவட்டம் ஆத்தூரில் தலையாட்டி விநாயகர் உள்ளார்.

90. ஆம்பூர் வேம்புலி அம்மன் ஆலயத்தில் உள்ள விநாயகருக்கு ஆண்டுதோறும் விநாயகர்சதுர்த்தி தினத்தன்று பிரமாண்ட லட்டு தயாரித்து படைப்பதை பக்தர்கள் வழக்கத்தில் வைத்துள்ளனர்.

91. நாகை மாவட்டம் நரிமணத்தில் உள்ள விநாயகரை தலையில் ஒரு குட்டு வைத்து விட்டே வழிபாடு செய்கிறார்கள்.

92. நெல்லை மாவட்டம் சீவலப்பேரியில் உள்ள இரட்டை விநாயகர்கள் இருவரும் எப் போதும் மாப்பிள்ளை கோலத்திலேயே அருள் பாலிக்கிறார்கள்.

93. திருவாரூர் ஆலயத்தூண் ஒன்றில் மூலதார கணபதி உள்ளார். இவரை வழிபட்டால் நமக்குள் இருக்கும் அரிய சக்திகள் வெளிப் படும் என்பது ஐதீகம்.

94. ஒவ்வொரு மாதமும் வரும் சதுர்த்தி தினத்தன்று 16 கன்னிப்பெண்களுக்கு ரவிக் கை துணி, வளையல், மஞ்சள், குங்குமம் கொடுத்து வன்னி மரத்தடி விநாயகரை வழிபட்டால் திருமண தடைகள் அகலும்.

95. நெல்லி மரத்தடியில் உள்ள விநாயகரை வழிபட்டால் பெண் குழந்தைகளிடம் மகிழ்ச்சி அதிகரிக்கும்.




96. மற்ற கடவுள்களை விட விநாயகர் பலன் களை முந்தி வந்து தருபவர் ஆவார். எனவே தான் அவரை முந்தி முந்தி விநாயகர் என்கி றார்கள்.

97. திண்டுக்கல் கோபால சமுத்திரகுளக்கரையில் உள்ள 108 விநாயகர் கோவிலில் ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட 32 அடி உயர விநாயகர் சிலை நிறுவப்பட்டது.

98. ஓம் வக்ரதுண்டாய ஹீம் என்பது தான் சட்டாட்சர மந்திரம் இந்த மந்திரத்தை உச்சரித்து விநாயகரை வணங்கினால் பகை வரை எளிதாக வென்று விடலாம்.

99. ராஜராஜ சோழன் சிறந்த சிவ பக்தர். இருப்பினும் அவர் விநாயகரை வணங்கத் தவறியதில்லை. தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் மேற்கு மூலையில் திருச்சுற்று மாளிகையில் உள்ள சின்ன ச்சின்ன கோவிலுக்குள் இருக்கும் விநாயகர் களை தான் அவர் வணங்கி வந்தார்.

100. புண்ணியத் தைத்தேடி காசி மாநக ருக்கு செல் பவர்கள் அங்குள்ள அனைத்து வித மாக ஆலய வழிபாட்டுச் சம்பிரதாயங்கள் சடங்குகளை முடித்துக்கொண்டு வரும் போது முடிவில் ஒரு சிறிய ஆலயத்தில் உள்ள டுண்டி ராஜகணபதியை வணங்கினால் தான் யாத்திரை முற்றுப் பெறுவதாக நம்புகின்றனர்.




# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com
aanmeegamalr (app)–ல்
படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# ஆன்மீக வழியில் அமைதி

மனம் உள்ளவன்தான் மனிதன் ஆவான். ஞானத்தின் பலன் அல்லது மனிதனுடைய மேன்மையான முடிவு மோட்சம் ஆகும். மனிதனுடைய பூர்ணமான வாழ்வு மனநிறைவான வாழ்க்கை மோட்சம் ஆகும். நிறைவு அடையாத மனதை நிறைவு செய்வதுதான் மோட்சம். நமது அறியாமை அகல வேண்டுமானால் நம் மனதில் விவேகம் வளரவேண்டும். மனம் என்பது நமது கண்களுக்குத் தெரியாத நம்மோடு இருக்கும் ஒரு அபூர்வமான நல்ல கருவி ஆகும். மனங்களில் ஆழ்மனம், மேலோட்டமான மனம் என பிரிக்கலாம். மேலும் மனிதர்களுடைய மனங்களை கோபப்படக்கூடிய மனம், பொறாமைப்படும் மனம், லோபப்படுகிற மனம் என்று மனங்களை வைத்து மனிதர்களை வகைப்படுத்தலாம். இப்படிப்பட்ட மனங்களில் ஏதேனும் ஒன்று நம்மிடம் இருந்தாலும் நம் மனம் நம் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியாது. நம் மனதில் நல்ல எண்ணங்களும் அதன் செயல்பாடுகளும் நிரம்பி இருந்தால்தான் மனதை நம் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு முடியும்.

மனிதனுடைய பாவ புண்ணியங்களுக்கு எல்லாம் காரணமாக இருப்பது இந்த மனம்தான். 'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்' என்று மனதை செம்மைபடுத்தும்படி அகஸ்தியர் ஞானப்பாடல் மூலம் வலியுறுத்தி பாடியுள்ளார். எனவே நமது மனதை செம்மையாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் நம்மையும் நம் செயல்பாடுகளை மட்டும் நன்கு கவனித்து வரவேண்டும். உன்னையும் உனது மனதையும் உனது செயல்பாடுகளையும் கவனமுடன் பார்த்துக்கொண்டு வந்தால் மற்றவர்களை பற்றி நினைப்பதற்குக்கூட உனக்கு நேரம் கிடைப்பதில்லை. அதனால் உன் மனம் எந்தநிலையிலும் வருத்தம், துன்பம் அடைவதில்லை. பெரும்பாலும் உன் மனம் துன்பப்படுவதற்கு துயரப்படுவதற்கு முக்கிய காரணம் உன்னை மறந்து உன்னுடைய செயல்பாடுகளை மறந்து மற்றவர்களின் செயல்பாடுகளை நீ உற்றுக் கவனிப்பதால்தான் என்பதை அறிந்து கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக ஒருவன் வசதியான பணம் படைத்தவனை பார்க்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவன் மனம் அவனை அறியாமல் அந்த பணக்காரனைப் பற்றி அவன் எப்படி பணக்காரனாக வசதி படைத்தவனான் என்பதில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு விடுவான். அதில் அவன் சில நேரங்களில் தன்னையே மறந்து விடுவான். அந்த பணக்காரனைப் பற்றியே சிந்தனையில் அவன் ஆழ்ந்து விடுவான். அந்த பணக்காரன் தவறான வழியில் சென்று பணம் சேர்த்திருக்கிறான் என்று தெரிந்து கொண்டாலும், மனிதன் நல்லவைகளை பின்பற்றுவதில் மன உறுதி இல்லையென்றால், அவன் நாளடைவில் அந்தப் பணக்காரனின் செயல்பாடுகளை தவறுகளை சிந்திக்காமல் பின்பற்றத் தொடங்கி விடுவான். அப்போது பாவ புண்ணியங்களைப் பற்றியெல்லாம் அவன் கவலைப்படுவதில்லை. அவன் மனமும் செயல்பாடுகளும் தவறான வழிக்குச் செல்வதற்கு காரணம் அவன் தன்னைப்பற்றி கவலைப்படாமல் மற்றவர்களைப் பற்றி இடைவிடாது உற்று



நோக்கியதன் விளைவு மனம் அமைதியில்லாமல் அவதிப்படுவான். எனவே நீ உன்னையே கவனித்து வரும்போது ஆன்மீக வழியில் உன் மனதை செயல்பாடுகளை செம்மைபடுத்த முடியும். ஆன்மீக வழியில் மனம் சென்று செம்மையானால் உன் செயல்பாடுகள் அனைத்தும் நல்லவைகளாக இருக்கும். அதனால் மன அமைதியும் கொள்வாய்.

வேதத்தில் ‘சமம்’ என்றால் ‘மனம் கட்டுப்பட்டு இருத்தல்’ என்று மனித மனம் விளக்கப்பட்டுள்ளது. மனிதமனம் இஷ்டத்துக்கு மனக்கட்டுப்பாடு இல்லாமல், மனம்போன போக்கில் சென்றால், மனம்போனபடி செயல்பட்டால் மனிதன் தான் விரும்பியதை அடையவோ, நிரந்தர ஆனந்தம் அடையவோ மன அமைதி பெறவும் முடியாது. அதனால் நமது மனமும் அமைதியை எளிதில் இழக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம். மனதை நம் கட்டுப்பாட்டின்கீழ் வைத்துக் கொண்டால், நம் பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைப்பதோடு, மனதிற்கும் அமைதி கிடைக்கும்.

**நம் கட்டளையை நமது ஆழ்மனம் கேட்காதபட்சத்தில், நம் மனம் நமது கட்டுப்பாட்டில் இல்லை என்பதை அறிந்து கொள்ளலாம். நம் மனம் நமது கட்டுப்பாட்டில் செயல்படுவதற்கான முயற்சியில் ஆன்மீக வழியில் தியானம், பக்தி, யோகம் பஜனை போன்ற பயிற்சிகளில் தவறாமல் ஈடுபடவேண்டும்**

மனிதனைத் தவிர பறவை, விலங்கு, மரம் செடிகொடிகள் போன்ற மற்ற உயிரினங்களுக்கு மனம் என்னும் கண்ணுக்குத்தெரியாத இந்திரியம் மனிதனைப்போல் இல்லை. மனிதனுக்கு உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால் மனம் என்ற கண்ணுக்குத் தெரியாத இந்திரியம் இருப்பது ஆகும். எனவே மனிதன் உலகில் சிறந்த மனிதானாக இருக்க வேண்டுமானால் மனதை தன்னோட கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நம் மனம் நமது கட்டுபாட்டில் ‘இருக்கிறது’ அல்லது ‘இல்லை’ என்பதை நாம் எப்படித் தெரிந்து கொள்வது? என்று கேட்கத்தான் தோன்றும். எடுத்துக்காட்டாக நாம் இரவு படுக்கப்போகும்போது நமது ஆழ்மனதில் ‘என்னை காலை ஐந்து மணிக்கு எழுப்பி விடு’ என்று உணர்வுபூர்வமாக மனதிடம் கட்டளையிடுங்கள். நாம் கட்டளையிடுவதை நமது ஆழ்மனம் அதனை உள்வாங்கிக்கொண்டு, காலையில் நாம் அதற்கு கட்டளையிட்டபடி தவறாமல் காலை ஐந்து மணிக்கு எழுப்பி விடும். நாம் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தாலும் எந்தவிதத்திலாவது நம்மை காலை ஐந்து மணிக்கு எழுப்பி விடும். அதாவது நாம் காணும் கனவின் மூலமாகவோ, பறவைகளின் ஒலியின் மூலமாகவோ, ஏதாவது ஒரு வினோதமான ஓசையின் மூலமாகவோ நம்மை தட்டி எழுப்பிவிடும்.

அவ்வாறு நாம் ஆழ்மனதில் கட்டளையிட்டபடி நம்மை காலையில் ஐந்து மணிக்கு மனம் எழுப்பி விடுவதற்குத் தவறும்பட்சத்தில், நம் கட்டளையை நமது ஆழ்மனம் கேட்காதபட்சத்தில், நம் மனம் நமது கட்டுப்பாட்டில் இல்லை என்பதை அப்போது இதன்மூலம் நாம் அறிந்து கொள்வதற்கு முடியும். நம் மனம் நமது கட்டுப்பாட்டில் செயல்படுவதற்கான முயற்சியில் ஆன்மீக வழியில் தியானம், பக்தி, யோகம் பஜனை போன்ற பயிற்சிகளில் தவறாமல் ஈடுபடவேண்டும்.

நமது வேதங்களும் இதிகாசங்களும் உபநிடதங்களும் ஆன்மீக வழியில் தியானம், ஜபம், மூச்சுப்பயிற்சி, பிரார்த்தனை போன்ற வழிமுறைகளை நமக்கு விளக்கிக் காட்டியுள்ளன. ஆன்மீக வழியில் தெரிவிக்கப்பட்ட பயிற்சிகளை தவறாமல் நாம் மேற்கொள்ள வேண்டும். ஒரு மனிதன் படுக்கையில் படுத்தவுடன் பத்து நிமிடங்களில் அவன் தன்னை மறந்து தூங்குகிறான் என்றால் உண்மையில் அது அவனுக்கு ஆண்டவன் கொடுத்த மிகப்பெரிய வரம்தான் என்று கூற வேண்டும். அவனுடைய மனம் அவன் சொல்லுக்கு கட்டளைக்கு அழகாக கட்டுப்படுகிறது என்று புரிந்து கொள்ளவேண்டும். அதேபோல் ஒரு மனிதன் எந்தவிதமான கனவுகளும், நினைவுகளும் இல்லாமல் நிம்மதியாகத் தூங்குகிறான் என்றால் அவனது ஆழ்மனம் அப்போது நல்ல வேலை செய்துகொண்டு இருக்கிறது என்று அர்த்தம்.

நாம் வீட்டிற்கு வெளியில் இருக்கும் மிதிவண்டி, கார், இருசக்கர வாகனங்கள் மற்றும் நமது வீட்டிற்குள் வைத்திருக்கும் பொருட்களான தொலைக்காட்சிப்பெட்டி, மிக்சி, கிரைண்டர் போன்ற மின் சாதனப்பொருட்களை

கவனமாக பராமரித்தால்தான் அவைகள் நீண்ட காலத்திற்கு நன்கு செயல்படும். இத்தகைய நம் கண்களுக்குத் தெரியும் வெளியில் காணப்படும் பொருட்களின்மீது கவனம் செலுத்துகிறோம். ஆனால் நம்மில் இருக்கும் நம்மோடு உள்ளிருந்து இடைவிடாமல் உறவாடும், நம்முடைய கண்களுக்குத் தெரியாத நமது மனதையும் அதன் செயல்பாடுகளையும் சிறிதும் கவனிப்பதில்லை. மனம் நம் கட்டுப்பாட்டுக்குள் இருத்தல் வேண்டும். நம்மையும் மீறி மனம் அதன் போக்கில் செல்லாமல் நம் சொல்லுக்கு கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும் என்பதைக்கூட நாம் அறிந்திருக்கவில்லை. இதற்கு காரணம் நமது அறியாமையே ஆகும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மனக்கட்டுப்பாடு என்றால் மனதை அடக்கி ஒடுக்கி மனதில் எண்ணங்களே இல்லாமல் அதாவது எந்தவித எண்ணங்கள் மனதில் இல்லாமல் வெறுமையாக வைத்துக்கொள்வது என்பது அர்த்தம் இல்லை. மனதை நமது பயன்பாட்டுக்குத் தகுந்தவாறு, மனதிற்கு நாம் எஜமானாக இருந்து மனதை நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு, நாம் செயல்புரிய வேண்டும். நமது உடலில் உள்ள கை கால்கள் போன்றவற்றை எவ்வாறு நமது பயன்பாட்டிற்கு பயன்படுத்துகிறமோ, அதுபோல் நமது மனதையும் நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

நமது மனதை எப்படி வைத்துக் கொள்வது என்று சிந்தித்துப் பார்த்தால், நமது மனதை நமக்கு ஓர் பயன்படும் கருவியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நமது மனதில் எண்ணங்கள் எதுவும் இல்லாமல் வைத்திருப்பது என்பது அல்ல. வானமே இல்லாமல் இந்த பிரபஞ்சத்தை நினைத்து நம்மால் பார்க்க முடியுமா? அதுபோல்தான் மனிதர்கள் தங்கள் மனதை எண்ணங்களே இல்லாமல் வெறுமையாக ஒருபோதும் வைத்திருக்க முடியாது. ஆனால் நமது மனம் சும்மா இருப்பதே சுகம் ஆகும் என்று சித்தர்கள் கூறியுள்ளனர். இதனையே பத்திரகிரியார் சும்மா இருப்பதை நினைத்து ‘ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனை சுட்டறுத்து தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்‘ என்று ஐம்புலன்களை அடக்கி மனதை கட்டுப்படுதல் அவசியத்தை இப்படி பாடல் மூலம் கூறி ஏங்குகிறார்.

மனித மனங்களை தூய்மையான மனம், உறுதியான மனம் என்றும் வகைப்படுத்தலாம். தூய்மையான மனம் நமக்குத் கண்ணுக்குத்தெரியாத உருவமற்ற நல்ல கருவி ஆகும். நாம் சுவாசிக்கும் காற்றுக்கு உருவம் இருக்கிறதா? வீசும் தென்றலுக்கு வடிவங்கள் இருக்கிறதா? காற்றை கண்ணால் காண முடிவதில்லை. ஆனால் நம்மைச்சுற்றி காற்று இருப்பதை நாம் நன்கு உணர முடியும். அதுபோன்றதுதான் மனமும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நமது மனதை தூய்மையாக வைத்துக் கொள்ளவில்லையானால், மனக்கட்டுப்பாடு இல்லை என்றால், நம் மனம் அதன் இஷ்டத்திற்குதான் செயல்படும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பொறாமைப்படாமல் இருப்பது, மென்மையாகப் பேசுதல், வன்முறைகளை வெறுத்தல், அனைவரிடமும் உண்மை அன்புடன் நடந்து செயல்படுதல், சகிப்புத் தன்மையுடன் பொறுமையுடன் இருத்தல் போன்ற உலகில் காணும் நல்ல பண்புகளைப் பெற்றிருப்பதுதான் தூய்மையான மனம் ஆகும்.



www.aanmeegamalar.com

நண்பர் ஒருவர் நம்மிடம் நன்கு சிரித்துப் பேசிக்கொண்டு இருக்கும்போது, திடீரென்று கருத்து வேறுபாட்டால் நம்மிடம் கோபப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நாம் பதிலுக்கு அவர் மீது கோபப்படக்கூடாது. அதற்கு மாறாக நாம் நம்முடைய கருத்துக்களை பொறுமையாக, மென்மையாக நண்பருக்கு புரியும்படி எடுத்துக் கூறவேண்டும். அவர் நாம் சொல்வதைக் கேட்காமல் புரிந்து கொள்ளாமல் அவர் தன்னுடைய கருத்தில் பிடிவாதமாக இருந்தால், பொறுமையுடன் அவரிடமிருந்து மௌனமாக விலகிக் கொள்வதுதான் மென்மையான மனதிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அவரிடமிருந்து நாம் அப்படி அவ்வாறு விலகினால் அவர் என்ன நினைப்பார், உலகம் நம்மை பற்றி என்ன நினைக்கும் என்று அப்போது நம் மனதைப்போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. 'இன்னா செய்தாருக்கும் இனியவை செய்தல்' இவையெல்லாம் தூய்மையான மென்மையான மனதிற்குரிய நல்ல பண்புகளில் ஒன்றாகும்.

தூய்மையான மனம் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு கரும்பலகையில் முழுதும் எழுத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது என்பதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கரும்பலகையில் நாம் எதுவும் மேலும் எழுத வேண்டும் என்றால், அதில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களை அழித்தால்தான் கரும்பலகை தூய்மைநிலை அடையும். மேலும் அந்தக் கரும்பலகை தூய்மைப்படுத்தினால்தான் நாம் மேலும் அதில் எழுதமுடியும். நமது மனம் நல்ல பண்புகளுடன் எண்ணங்களுடன் தூய்மையாக மென்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். உலகில் உள்ள தீய எண்ணங்கள், தீய செயல்பாடுகள், பொறாமை, கோபம், வீண்விதண்டவாதம், தாழ்வுமனப்பான்மை போன்றவைகளால் மனதில் நிரம்பி இருந்தால், அவற்றை எல்லாம் கரும்பலகையில் இருக்கும் எழுத்துக்களை அழித்துத் தூய்மைப்படுத்துவதைப்போல், நமது மனதை நல்ல எண்ணங்களினால் செயல்பாடுகளால் நிரப்பி தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

நம் மனதை ஆன்மீக வழியில் சென்று மனதில் உள்ள தீய எண்ணங்கள், தீய செயல்பாடுகள், பொறாமை, கோபம், இரக்கமின்மை போன்றவற்றை அகற்றி மனதை தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரைப் போன்று எல்லா உயிர்களையும் தன் உயிர்போன்று நினைத்தல் வேண்டும். மனம், வாக்கு, செயல் மூன்றிலும் உண்மை, பொறுமை, சகிப்புத்தன்மை, உண்மை அன்பு போன்ற உலகில் காணப்படும் நல்ல பண்புகள் அனைத்தையும் நம் மனதில் நிரப்பிக் கொள்வதுதான் தூய்மையான மனத்திற்குரிய அடையாளங்கள் ஆகும்.

உலகில் காணப்படும் நல்ல பண்புகளை மனதில் நன்கு பதிந்து


**பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்**



வைத்துகொள்ள வேண்டும். அவைகளை எந்தச் சூழ்நிலையிலும் விட்டுவிடாமல் நாம் கடைப்பிடித்து வர வேண்டும். நல்ல பண்புகளிலிருந்து எந்தச் சூழ்நிலையிலும் மனம் தளராமல் இருப்பது உறுதியான மனமாகும். எடுத்துக்காட்டாக உறுதியான தூய்மையான மனம் என்பதற்கு அரிச்சந்திரன் வரலாற்றை எடுத்துக் கொள்ளலாம். மன்னன் அரிச்சந்திரன் நாடு, நகரம், போன்றவைகளை மட்டுமல்லாமல், தன் அன்பு மனைவி சந்திரமதி, அன்பு மகன் லோகிதாசன் போன்றவர்களை இழந்து கஷ்டப்பட்டாலும் வாக்குத் தவறாமல் உண்மை பேசுவதில் உறுதியாக இருந்தான். விசுவாமித்திர முனிவருக்கு கொடுத்த வாக்கினை காப்பாற்றுவதில் சத்தியத்தில் உறுதி காட்டிய செயல்பாடுகள் அவனது உறுதியான மனதினைக் காட்டுகிறது.

பதி இழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதி இழந்தனம் இனி நமக்குளதென
நினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை
இலக்கிலேம் என்றார்
மதி இழந்துதான் வாயிழந்து
அருந்தவன் மறைந்தான்

என்ற பாடல் அரிச்சந்திர புராணம் கூறும் வரலாற்று உண்மை ஆகும்.

மனக்கட்டுப்பாடு என்றால் மனதை தூய்மையாகவும், உறுதியான மனதுடன் இருப்பதுதான் மனக்கட்டுப்பாடு ஆகும். தீய பழக்க, வழக்கங்களை விட்டு விலகி நிற்பது சற்றுக் கடினம்.

நல்லவைகளை கடைபிடிப்பதில் உறுதியாகவும், தீவிரமாகவும் இருப்பது அதைவிடக் கடினம். அவ்வாறு கடைபிடித்தால், உலகில் நிலைத்த புகழை அடையலாம் என்பது, அரிச்சந்திரன் வரலாறு காட்டும் உண்மை ஆகும்.

கீதையில் கிருஷ்ண பகவான். "கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே" மற்றும் மனிதன் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகள் பற்றி போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்துள்ளார். பொறாமைப்படும் மனம், கோபப்படும் மனம், லோபப்படும் மனம் இப்படிப்பட்ட தீய குணங்களில் ஒன்று இருந்தால்கூட மனம் நம் கட்டுப்பாட்டுக்குள் இருக்காது. உலகில் உள்ள அனைத்து நற்பண்புகளுடன்கூடிய மனம்தான், தூய்மையான மனம் ஆகும். சாஸ்திரங்களில் கூறியுள்ள நல்ல பண்புகளை மனிதன் தவறாமல் கடைபிடித்து செயல்படுத்தினால் அவன் மனம் அவனோட கட்டுப்பாட்டுக்குள் அடங்கும். மனிதனுடைய நற்பண்புகள் கூடிய மனமே தூய்மையான மனம் ஆகும்.

உலகில் சிலர் நல்லவர்களாக மென்மை குணம் உள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் உலக விவகாரங்களில் தங்களையும் அறியாமல் அவர்கள் ஈடுபடும்போது எதிர்பாராமல் மற்றவர்களின் கடின வார்த்தைகளைக் கேட்ட வுடன் அவர்களையும் அறியாமல் அவர்கள் நல்ல மனம் பாதிக்கப்பட்டு துன்பத்தில் ஆழ்ந்து விடுவார்கள். அதனால் அவர்கள் சிலநேரங்களில் நல்ல குணங்களின் உறுதிப் பாட்டிலிருந்து மனம் தளர்ந்து விடுவார்கள்.

நமது மனதை மென்மையாக வைத்திருப்பதோடு, மற்றவர்கள் நம்மீது கூறும் கடுமையான வார்த்தைகளை சொற்களை பொருட்படுத்தாமல் தாங்கிக்கொள்ளக்கூடிய மனபக்குவத்தை நாம் அடைய வேண்டும். அவர்கள் நற்பண்புகளைக் கடைபிடிப்பதில் தங்கள் கொள்கையில் வாய்மை தவறாத அரிச்சந்திர மன்னன்போல் மன உறுதிபாடுடன் இருக்க வேண்டும். நம்மிடம் இருந்து எந்தச் சூழ்நிலையிலும் எந்தவித காரணத்தினாலும் மென்மையான வார்த்தைகளைத் தவிர வன்முறை தரக்கூடிய வார்த்தைகள் ஏதும் வரக்கூடாது.

அந்த அளவுக்கு நற்பண்புகளில் மனதில் உறுதிப்பாடு இருக்க வேண்டும். நமது நல்ல எண்ணங்களை புரிந்து கொள்ளாமல் மற்றவர்கள் நம் மீது கோபப்பட்டு மிகக்கடுமையாககூட பேசலாம். அவ்வாறு அவர்கள் இழிவாக நம்மை நோக்கிப் பேசினாலும், தர்மத்துக்கு மாறான வார்த்தைகளை நம்மை நோக்கி பேசினாலும் அவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு, அவர்கள் மீது கோபப்படாமல் அவற்றை தாங்கிக்கொள்ளக்கூடிய பக்குவநிலையில் இருப்பதுதான் உறுதியான மனம் ஆகும்.

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com



மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க
Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து
Google Play
Search
Categories
Home
Top charts
New releases
Apps
My apps
Shop
Games
Family
Editors' Choice
Account
Payment methods
My subscriptions
Redeem
Buy gift card
My wishlist
My Play activity
Parent guide
Aanmeega Malar - ஆன்மீக மலர் - All in One App
mobigoods
News & Magazines
Contains ads
This app is compatible with some of your devices.
Installed
ஆன்மிகமலர்
aanmeegamalar
Subscribe
MONEY
இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...
நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை